www.padippakam.com


# பயனீட்டாளர் குரல்

**UTUSAN KONSUMER**

பினாங்கு பயனீட்டாளர் சங்க வெளியீடு * 11/2000 * நவம்பர் 2000 * மவெ. 1.00 * ISSN 1511-5240 * PP/6410/11/2000


மில்லியன் கார்கள்
ட்டுக்கொள்ளப்பட்டன

MITSUBISHI MOTORS
மிட்சுபிஷி
மோட்டோர்ஸ்

# பாதுகாப்பு இல்லாத கார்கள் & டயர்கள்




- 100 பேருக்கு மேல் இறந்துள்ளனர். மில்லியன் கணக்கான டயர்கள் மீட்டுக்கொள்ளப்பட்டன.
- வாகன உற்பத்தியாளர்கள் காரின் கோளாறுகளை மறைத்து விடுகின்றனர்.
- மில்லியன் கணக்கிலான கார்கள் வெளிநாடுகளில் மீட்டுக்கொள்ளப்பட்டன. ஆனால் உள்ளூரில் குறைவான கார்கள் மட்டுமே மீட்டுக்கொள்ளப் பட்டன.
- பாதுகாப்பான கார்களைத் தயாரிப்பதை விட, நீதிமன்ற நடவடிக்கையை எதிர்நோக்குவது மலிவானது.
- மலேசியக் கார்களும், டயர்களும் பாதுகாப்பானவையா?
- 23 ஆண்டுகளாக மிட்சுபிஷி தனது கோளாறுகளை மறைத்து வந்துள்ளது.

Ford
உலகம் முழுவதிலும் 176 இறப்புகள்

*- மேல் விபரங்களுக்குப் பார்க்க பக்கங்கள் 2 & 4*

## அதிர்ச்சி மருந்து

ஸ்டீவன் ஜோன்சன் சின்ட்ரம் - மருந்து அலர்ஜியால் மரணப்பிடியிலிருந்து மீண்டு வந்த யூஸ்ரி

- ஸ்டீவன் ஜோன்சன் சின்ட்ரமை ஏற்படுத்தும் மருந்துப் பட்டியல் உள்ளே

*பக்கம் - 6*



## வன்செயல்

வம்பு செய்யாமல் வழி தேடுவோம்!

*பக்கம் 10 & 11*



## நச்சுப் புகையிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்

நச்சுப் புகையால் எங்கள் வீட்டுப் பொருட்கள் சேதமடைகின்றன!
செலாமா மக்களின் வேதனை!

*- பக்கம் 15*

www.padippakam.com



# பாதுகாப்பற்ற கார்கள் மூடி மறைக்கிறார்கள்!

**உங்களுடைய பளபளக்கும் காருக்கு எல்லாவிதமான பாதுகாப்பு அம்சங்களும் உண்டு என்று உற்பத்தியாளர் கூறும்பொழுது நீங்கள் அதனை நம்பிவிடுவீர்களா? உங்கள் புதிய ரக காரில் எப்படி கோளாறு இருக்க முடியும்என்று நீங்கள் நினைக்கலாம். பெரிய கம்பெனிகள் எப்படிப் பொய் சொல்லும் என்று கூட நீங்கள் வாதிடலாம். பெரிய கம்பெனிகள் பொய் சொல்லுவார்களா? சொல்லுவார்கள்.**

பெரிய கார் கம்பெனிகள் கூட கோளாறுகள் நிறைந்த கார்களை உற்பத்தி செய்யும் என்பதற்குப் பல ஆண்டுக-ளாகவே பி.ப.சங்கத்திற்கு வந்த புகார்களே சான்று. புத்தம் புதிய கார்களின் புகார்கள் வருமாறு:

## பி.எம்.டபல்யு. (BMW)

- காரை ஸ்டாட் செய்யும்பொழுது சிறிய வெடிப்புச் சத்தம். அதனைத் தொடர்ந்து வெள்ளைப் புகை
- கார் பின்னோக்கி இழுத்தல்
- அதிர்வு
- கோளாறான பிரேக்குகள்
- கோளாறான குளிர் சாதன வசதி

## வோல்வோ (Volvo)

- பழுதே பார்க்க முடியாத இடது டிரிப்ட்
- கட்டுக்கடங்காத ஸ்டேரிங்
- என்ஜினிலிருந்து சத்தம்
- கோளாறான பிரேக்குகள்
- ஸ்டேரிங் சத்தம்

## புரோட்டோன்(Protons)

- துருப்பிடித்த பாகங்கள்
- கோளாறான தானியங்கி இயந்திரம்
- கை பிரேக் மாட்டிக்கொள்ளுதல்
- குளிர்சாதன வசதி இயங்கவில்லை
- இன்ஜினில் கடகட சத்தம்
- அதிர்வு
- எப்சோபர்ஸ் இயங்காத நிலை
- வெடித்த ஜன்னல் கண்ணாடி
- இயங்காத இயந்திரம்
- கோளாறான ஒயரிங்
- தண்ணீர் ஒழுகுதல்

## ரூசா (Rusa)

ஸ்டேரிங்கை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியவில்லை.

## சிட்ரோன் (Citroen)

- இன்ஜினில் புகை வெளியாகிறது.
- குளிர் சாதன வசதியில் நீர் கசிகிறது.
- ஜன்னலிருந்து தண்ணீர் ஒழுகிறது.
- வேகத்தைக் காட்டும் மீட்டர் அதிர்தல்



இப்புகார்கள் புதிய வாகனங்கள் சம்பந்தப்பட்டவைதான். இவற்றில் உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால், பெரிய கார் விற்பனையாளர்கள் வெளிநாடுகளில் தங்கள் கார்களை மீட்டுக் கொண்டி-ருப்பதே இதற்கு உதாரண-மாகும்.

## மிட்சுபிஷி (Mitsubishi)

மிட்சுபிஷி உலகில் மூன்றாவது பெரிய கார் உற்பத்திக் கம்பெனியாகும். ஆனால் கடந்த 23 வருடங்களாக மிட்சுபிஷி தன்னுடைய காரில் உள்ள கோளாறுகளை மிகவும் சாதூரி-யமாக மறைத்து வந்திருக்கிறது. கார் வாங்கியவர்-களிடமிருந்து வந்த சுமார் 64,000 புகார்களை இந்தக் கம்பெனி மறைந்து வந்திருக்கிறது என்பதை ஜப்பானிய அரசாங்கம் கண்டு பிடித்ததும் மிட்சுபிஷி வேறு வழியில்லாமல் 1 மில்லியனுக்கு மேற்பட்ட தன்னுடைய உற்பத்திக் கார்களை மீட்டுக் கொண்டுள்ளது.

## ஃபோர்ட் எக்ஸ்புளோரர் (Ford Explorer)

ஃபோர்ட் கார்களும் டிரக்குக்களும் அதனுடைய இயந்திரம் சூடாகும் பொழுது இயங்காமல் இருந்ததால், ஃபோர்ட் கம்பெனி தன்னுடைய வாகனங்களை மீட்டுக் கொள்ளாத காரணத்தால், கலிபோர்னியா நீதிமன்றம் தன்னுடைய 1.7 மில்லியன் வாகனங்களை ஃபோர்ட் மீட்டுக்கொள்ள வேண்டும் என்று கட்டளை பிறப்பித்துள்ளது. இவர்க-ளுடைய வாகனங்களைப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட 4 இறப்புக்களுக்கு ஃபோர்ட் கம்பெனி இழப்பீடு வழங்கியுள்ளது. இதற்குப் பிறகு ஃபோர்ட் தானாகவே தன்னுடைய உற்பத்தியில் மிகவும் பிரபலமான 351,000 ஃபோக்கஸ் ரக கார்களை அவற்றின் சில பாகங்களில் உள்ள கோளாறுகளைத் நிவர்த்தி செய்வதற்காக மீட்டுக் கொண்டுள்ளது. ஹோன்டாவும் குறைபாடுள்ள ஸ்டீரியோ சிஸ்டம் மற்றும் இயந்திர எண்ணெய் மூடிகள் உள்ள அரை மில்லியன் கார்களை மீட்டுக்கொண்டுள்ளது. சாலைகளில் ஓடிக்கொண்டிருக்கும் குறைபாடுள்ள கார்கள் எந்த நேரத்திலும் ஆபத்தைக் கொண்டு வரலாம். இவற்றுக்குப் புகார் செய்து தக் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் உற்பத்தியாளர்கள் மிகவு தைரியமாக இன்னும் நிறைய கார்களைச் சாலையி ஓடவிடுவார்கள்.

# மலேசியக் கார்களும் டயர்களும் பாதுகாப்பானதா?

**ஒரு வாகன ஓட்டுனர் பாதுகாப்பைப் பற்றி நினைக்கும்பொழுது அவர் எண்ணத்தில் உதிப்பது காரைப் பாதுகாப்பாக செலுத்துவது, விழிப்பாக இருப்பது, குறிப்பிட்ட வேகத்திலேயே காரைச் செலுத்துவது மற்றும் தன் முன்னே செல்லும் காருக்கும் தனக்கும் உள்ள போதிய இடைவெளியை உறுதிப்படுத்திக்கொள்வது போன்றவைதான். இவற்றையெல்லாம் ஒருவாறு கவனத்தில் கொண்டிருந்தால் வாகன விபத்துக்களைத் தவிர்க்கலாம் என்றுதான் நம் நாட்டில் பிரச்சாரமும் செய்யப்படுகிறது.**

**ஆனால் மலேசியாவில் குறைபாடுள்ள வாகனங்கள் மற்றும் டயர்களைப் பற்றிப் பேசுவது குறைவு.**

**மலேசியாவில் பெரும்பாலும் கார் பாதுகாப்பைப் பற்றி விபரங்கள் தருவது கார் விற்பனையாளர்கள்தான். எப்பொழுதும் தாங்கள் உற்பத்தி செய்யும் கார்கள் நல்ல தரத்தைக் கொண்டிருப்பதாகவும், அதனுடைய பாதுகாப்பிற்குத் தாங்கள் உத்தரவாதம் அளிப்பதாகவும் கூறிக்கொள்வர். வேறு வட்டாரங்களிலிருந்து அவர்களுடைய கார்களைப் பற்றி எந்த விபரமும் தெரியாத காரணத்தால், சாலையில் நடக்கும் நிறைய விபத்துக்களுக்கு கோளாறான கார் இயந்திரங்களும் டயர்களும்தான் காரணமாக இருக்கலாம் என்ற உண்மை விபரம் மறைக்கப்படுகிறது.**

**அமெரிக்காவில் பாயர்ஸ்டோன்/ஃபோர்ட் டயர்கள் மீட்டுக்கொள்ளப்பட்டது மலேசியர்களுக்கு ஒரு பெரிய விஷயமல்ல. காரணம் இந்த டயர்கள் மலேசியச் சந்தைகளுக்கு விநியோகம் செய்யப்படவில்லை என்று வெளியான செய்திகளேயாகும்.**

**உள்நாட்டு டயர் உற்பத்தியாளர்கள் இங்கு தயாரிக்கப்படும் டயர்கள் நல்ல தரத்தைக் கொண்டிருப்பதாகவும் அகில உலக டயர் உற்பத்தியின் தரத்துக்குத் தங்களை உயர்த்திக்கொண்டுள்ளதாகவும் மக்களுக்கு உறுதி அளித்துள்ளனர். இந்த டயர் உற்பத்தியாளர்கள் மலேசிய டயர் உற்பத்தியாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் ஆவர்.**

**உற்பத்தியாளர்களின் கவனக்குறைவினாலும் உற்பத்தி செய்யப்படும் டயர்களில் கோளாறுகள் ஏற்படுகின்றன என்பதை இந்த சங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.**

**ஃபோர்ட் மோட்டோ கம்பெனியின் ஒரு பகுதியான வோல்வோ, V70 ரகம் கொண்ட 116,000 டயர்களைக் கடந்த ஆகஸ்ட் 2000ல் மீட்டுக்கொண்டுள்ளது. ஆனால் மலேசியப் பயனீட்டாளர்கள் இந்த டயரினால் பாதிக்கப்படவில்லை என்று விரைவில் வோல்வோ அறிவிப்பு செய்தது.**

**மலேசியாவில் புரோட்டோன் பெர்டானாவில் 1% மீட்டுக்கொள்ளப்பட்டபொழுது, பிரச்னை ஒன்றும் அவ்வளவு பெரிதல்ல என்று புரோட்டோன் மலேசி பயனீட்டாளர்களுக்கு அறிவிப்பு செய்த வெளியாகியிருக்கும் வாஜாவில் தற்பொழுது உதித்திருக் தானியங்கி இல்லாத பிரச்னை கூட ஒன்றும் பெரித என்று வாஜா புறக்கணித்தது.**

**இவர்களின் இப்படிப்பட்ட உறுதிமொழிகளை மலேசியர் நம்பத்தான் வேண்டுமா? கார் உற்பத்தியாளர்களின் ஒ நோக்கம் மலேசியப் பயனீட்டாளர்களுக்குக் கார்க விற்பதுதான். அதனால் அவர்களுடைய கார்களில் உ கோளாறுகளை ஒப்புக்கொள்வார்களா என்ன? அப் ஒப்புக்கொண்டு கார்களை மீட்டுக்கொண்டாலும் மில்லி கணக்கில் இழப்பீடு அவர்களுக்குத்தானே.**

**வெளிநாடுகளில் கார் உற்பத்தியாளர்கள் அளிக் பாதுகாப்பு மற்றும் தர உத்தரவாதங்களும், வாக்குறுதிக உண்மைதானா என்பதனைக் கண்காணி அரசாங்கத்தின் சட்டப்பூர்வ அமைப்பு உள்ளது. உற் செய்யப்படும் கார்கள் பரிசோதிக்கப்பட்டு, அதனுன இயந்திரங்களும் டயர்களும் சோதனைக்கு அனுப்பப் பொய்யான கோரிக்கைகளை விடுக்கும் உற்பத்தியாள மீது சட்ட நடவடிக்கை எடுக்க அங்கு போதிய சட்டங் உண்டு.**

**ஆனால் மலேசியாவில் நிலைமை அப்படி இல்லை.**

**ஃபோர்ட் மோட்டோஸ் கம்பெனி பொதுமக்களுக தெரியப்படுத்தாமல் கோளாறான வைல்டர்னஸ் டயர்க மலேசிய சந்தையில் இருந்து மீட்டுக்கொண்டது. மலேசியாவில் விற்ற 110 வாகனங்களில் 6 வாகனங்க டயர்களின் மேல் பாகம் உரிந்து கோளாறுகளு உள்ளானதால் கடந்த ஜூன் 20 மீட்டுக்கொண்டுள்ளது. ஆனால் மலேசிய அரசா இந்தப் பிரச்னையைப் பெரிதுபடுத்தவில்லை. உண்மை**

(தொடர்ச்சி 4ம் பக்க

படிப்பகம்

www.padippakam.com



# வினவுங்கள் விடையளிக்கப்படும்!

## பினாங்கு பயனீட்டாளர் சங்கத் தலைவர் பதில் தருகின்றார்!



**பி. இராமசாமி**
**தாமான இந்திரவாசி**
**நிபோங் திபால்**

**வினா : நம் நாட்டில் மட்டும் வேறு எந்த நாட்டிலும் ஏற்படாத அளவுக்கு, சாலை விபத்துக்கள் அதிகம் ஏற்பட யார் காரணம்? ஓட்டுனரா? அரசாங்கமா அல்லது லைசன்ஸ் விநியோகிப்பாளரா?**

**விடை :** இதற்குப் பல காரணங்களைக் கூறலாம். இந்த மாத பயனீட்டாளர் குரல் முகப்புச் செய்தியைப் பாருங்கள். இது வரை நீங்கள் நினைத்துப் பார்த்திராத காரணங்கள் சாலை விபத்துக்கு இட்டுச் செல்கின்றன என்று அதிர்ச்சியான மேலும் பல காரணங்களைக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அடுத்ததாக சில பெற்றோர்கள் செய்யும் தவறும் இருக்கிறது. தங்கள் குழந்தைகள் மீது இருக்கும் அளவுக்கு அதிகமான அன்பின் காரணமாக பள்ளிப் போகும் வயதிலேயே, லைசென்ஸ் இல்லாவிட்டாலும் கூட மோட்டார் சைக்கிளை வாங்கி கொடுத்து விடுகின்றனர். அதுவும் சாதாரண மோட்டார்சைக்கிள் என்றாலும் பராவாயில்லை. பந்தயத்தில் ஓடுகின்ற மோட்டார்சைக்கிள் போன்ற அமைப்பும், சத்தமும் இளைஞர்களின் போக்கையே மாற்றி விடுகின்றது. சாலையில் ஓட்டும் போது பந்தயத்தில் ஓடுவது போல வரம்பு மீறி, சட்டத்தை மீறி, சாலை விதிகளை

## தீபாவளி வாழ்த்து கார்டுகளில் நடிகர் நடிகை படங்கள்

மதிக்காது செல்வதன் வழி பல அசம்பாவிதங்கள் பல உயிர்ப்பலிகள் எவ்வித காரணமுமின்றி நடைபெறுகின்றன.

சட்டம் அமுலாக்கம் சரியாக இல்லாமல் இருப்பதும், சாலை விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது.

**நா. கணேசன் டிரைவர்**
**உலுதிராம் தோட்டம்**
**ஜோகூர்**

**வினா : மது அரக்கனை ஒழிப்போம், 65 தவிகிதம் குடிகாரார்கள் இந்தியர்கள் என்ற பெரிய அளவில் விளம்பரங்கள் போடுவதால் குடிகாரார்கள் திருந்தி விடுவார்களா?**

**விடை :** நம் கண்முன்னால் நடக்கின்ற ஒரு அநியாயத்தை, கண்டிக்காமல் அது நடக்காதது போல் மௌனமாக இருந்து, எல்லாம் நல்ல படியாக நடக்கின்றது என்று வாழ்த்துக் கட்டுரை எழுதினால் அந்த அநியாயம் தொடராது என நீங்கள் நினைக்கின்றீர்களா?

அது போல தான் மது பிரச்னையும், மது பிரச்னையில் அதிக அளவு இந்தியர்கள் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்று சொல்வது வேதனையான விஷயம்தான். இந்த வேதனையை வெளியில் சொல்லாமல் இந்தால் பிரச்னை தீர்ந்து விடுமா?



## மது அரக்கனை ஒழிக்க முடியுமா?

சில சமயங்களில் பி.ப.சங்கம் இவ்வாறு தகவல் கொடுக்கும் போது சிலர் ஆத்திரப் படுகிறார்கள். ஆத்திரப் படும் போதாவது, ஒரு சிலர் சிந்திக்கத் தொடங்குவார்கள். சிந்திப்பதின் வழி இப்பிரச்னை ஏன் ஏற்படுகின்றது என்று ஆராய முற்படுவார்கள்.

இதன் வழி, இப்பிரச்னைக்கு முடிவு கட்டுவதற்கு ஒரு வழி பிறக்கும். ஆகவே, குடிகாரர்கள் திருந்துவார்களோ இல்லையோ, அது முக்கியமல்ல. புதிய குடிகாரர்கள் தோன்றாமல் இருந்து விட்டாலே அதுவே சமுதாயத்திற்கு கிடைத்த வெற்றி.

மேலும், அரசாங்கம் இதற்கு முழு பொறுப்பேற்றுக் கொண்டு, அந்த மது அரக்கனுக்கு ஒரு முற்றுப் புள்ளியை ஏற்படுத்த வேண்டும்.

**திருமதி புவனேஸ்வரி**
**ஜாலான் ரியா**
**சுங்கைப்பட்டாணி**

**வினா: குழந்தைகளுக்கு எப்படிப்பட்ட புத்தகங்களை வாங்கிக் கொடுக்கலாம்?**

**விடை:** நாம் விரும்பி படிக்கின்ற புத்தகங்களை நம் குழந்தைகள் கண்டிப்பாக படிக்க வேண்டும் என்று "சட்டம்" போடாமல் நல்ல நன்னெறிப் புத்தகங்களின் பெயர் பட்டியலைக் குழந்தைகளிடம் காண்பித்து அவர்களாகவே அவர்களுக்கு விருப்பமான புத்தகங்களை தேர்ந்து எடுத்து படிக்கச் செய்யலாம். நம் குழந்தைகள் "தீய பழக்கங்களை" ஏற்படுத்துகின்ற புத்தகங்களை வாசிக்காமல், நல்ல நற்பண்புகளை ஏற்படுத்துகின்ற புத்தகங்களை வாசிக்கின்ற பழக்கத்தை இது ஏற்படுத்திக் கொள்வார்கள்.

முதலில் பெற்றோர்கள், வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அது தானாகவே வீட்டில் வளர்கின்ற குழந்தைகளுக்கும் தொற்றிக் கொள்ளும். அதன் பிறகு, ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், பாரதியார் பாடல்கள், நல்வழி என்று பண்புகளையும், நல்வழிகளை போதிக்கின்ற புத்தகங்கள் நம் குழந்தைகளுக்கு சிபாரிசு செய்யலாம்.

**எஸ். எஸ். தாமரை**
**செந்தூல்**
**கோலாலம்பூர்**

**வினா: புனிதத் திருநாளாம் தீபாவளி கார்டில் நடிகர் நடிகைகளின் படத்தை போட்டு விற்பது சரிதானா?**
*(இவர் எங்களுக்கு அது போன்ற ஒரு கார்டை அனுப்பி இந்த 'வினா'வை எழுப்பியிருக்கிறார்)*

**விடை:** விற்பது சரி இல்லைதான், அதேப் போல் அதனை வாங்குவதும் சரியில்லையே! இத்தகைய சினிமா நடிகர் நடிகைகளின் படத்தை கொண்டு அச்சிடப்பட்டு விற்கப்படும் கார்டுகள் சந்தைக்கு விற்பனைக்கு வரும்போது, பயனீட்டாளர்களாகிய நாம் அவற்றை வாங்கவில்லை என்றால் அது அடுத்த வருடத்தில் தானாகவே சந்தையை விட்டு ஓட்டம் பிடித்து விடும்.

எந்த ஒரு பொருளும் பயனீட்டாளர்களால் நாடப்படவில்லை என்றால், சந்தையில் அதற்கிருக்கும் மவுசு மங்கி விடும். இது தீபாவளிக் கார்டு விஷயத்திலும் பொருந்தும்.

**எஸ்.எஸ். சந்தனசாமி**
**பாரிட் புந்தார்**

**வினா: *பயனீட்டாளர் குரல்* இதழை ஒரு வெள்ளி கொடுத்து வாங்கிப் படிக்க முடியாதவர்களை பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

**விடை:** *பயனீட்டாளர் குரல்* , தமிழ் படிக்கத் தெரிந்த இந்தியர்களுக்காக - வெளியிடப்பட்டுகின்ற ஒரு பயனீட்டாளர் கல்வி விழிப்புணர்வு பத்திரிகை.



இதில் விளம்பரங்கள் இல்லை. குறிப்பிட்ட நிறுவனத்தை புகழ்பாடி எழுதுவதில்லை. பயனீட்டாளர்களைப், பொதுமக்களை பாதிக்கின்ற அல்லது நேரிடையாகவோ

## சாலை விபத்துக்கு யார் காரணம்?

அல்லது மறைமுகமாகவோ நடைபெறுகின்ற தில்லுமுல்லுகளை - மோசடிகளை அம்பலப்படுத்துகின்ற துணிச்சல்மிக்க ஒரு இதழாக வெளிவரும் இதற்கு நமது தமிழ் படிக்கத் தெரிந்த சமூகம் ஆதரவு தர மறுப்பது மனக்கவலையைத் தருகிறது.

மாதத்திற்கு ஒரு வெள்ளி கொடுத்து *பயனீட்டாளர் குரல்* வாங்க முடியாதவர்கள் எவ்வாறு தங்களது உரிமையை நிலைநாட்டிக் கொள்ள முடியும்.

உங்களைப் போன்ற படித்து பயன் பெற்றவர்கள் கூட எங்களுக்கு உதவலாம். உங்களால் முடிந்த வரை சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தினால், அதுவே ஒரு சமுதாய சேவையுமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# வெடிக்கும் டயர்கள்

## நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்துபோயினர்! மில்லியன் கணக்கில் டயர்கள் மீட்டுக்கொள்ளப்பட்டன!

**கா**ரை நீண்ட தூரப் பயணத்திற்குக் கொண்டு செல்லும் ஒருவர் முக்கியமாக காரின் டயரையும் சோதனையிடுவார்.

கடந்த 9.8.2000 ஃயர்ஸ்டோன் டயர்ஸ் நிறுவனம் மற்றும் ஃபோர்ட் மோட்டோர் கம்பெனி ஃபோர்ட் கார்களுக்குப் பொருத்தப்பட்ட 6.5 மில்லியன் ஃயர்ஸ்டோன் டயர்களை மீட்டுக்கொண்டுள்ளது. இந்த டயர்களில் மேல் தோல் உரிந்ததால் ஏற்பட்ட விபத்தில் ஓட்டுனர்கள் பலியானதாக வந்த புகார்களே இதற்குக் காரணமாகும்.



*உள்நாட்டில் தயாரிக்கப்படும் டயர் ஒன்றின் மேல் தோல் உரிந்து விட்டது.*

அமெரிக்க நெடுஞ்சாலை, வாகன, பாதுகாப்பு நிர்வாகம் மேற்கொண்ட ஆய்விலிருந்து இந்த டயர் பொருத்தப்பட்ட ஃபோர்ட் கார்களில் 3,500 விபத்துக்கு உள்ளாகியுள்ளது. இதுவரைக்கும் இதனால் இறந்தவர்களின் எண்ணிக்கை 119. ஆனால் உண்மையான எண்ணிக்கை இன்னும் சரியாகத் தெரியவில்லை.

இதேப்போன்று அமெரிக்காவில் இன்னும் சில டயர் உற்பத்தியாளர்களான மெஷெலின், கூப்பர் டயர், கொன்டினென்டல் ஜெனரல் டயர்களும் விபத்துக்களையும் மரணங்களையும் ஏற்படுத்தியுள்ளது. அதனால் இங்கு மலேசியாவில் நாம் உபயோகப்படுத்தும் டயர்கள் பாதுகாப்பானவையா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது.

மலே மெயிலில் வெளியான சலீம் குலிஹஂந்தனுக்கு ஏற்பட்ட சம்பவம் இதற்குத் தக்க சான்றாகும். ஜெல்லியிலிருந்து ரந்தாவ் பாஞ்ஜாங்கிற்கு சலீம் தன்னுடைய குடும்பத்தாரோடு காரில் சென்றுகொண்டிருக்கும்பொழுது புதியதாக பொருத்தப்பட்ட டன்லோப் டயர் வெடித்ததில் சலீம் பெருத்த அதிர்ச்சிக்குள்ளானார். அவர் சம்பந்தப்பபட்ட டயரை கடைக்கு எடுத்துச் சென்று கேள்வி எழுப்பியபொழுது, சம்பந்தப்பட்ட டயர் அவருடைய டோயோட்டா ஹீயூலக்ஸ் 4WD காருக்குப் பொருந்தாது என்று அறிவித்தனர்.

ஆனால் டன்லோப் கம்பெனியைச் சேர்ந்தவர் டயரில் கோளாறான குழாயே காரணம் என்றும் இந்தக் கோளாறான குழாயை சலீம் மாற்றிப் பொருத்தியிருந்தால் டயர் வெடித்திருக்காது என்று காரணம் கூறியிருந்தார். ஒரே பிரச்னைக்கு இரு வேறு காரணங்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு சைம் டயரில் உள்ள கோளாறுகள் தொடர்பாக *பயனீட்டாளர் குரல்* செய்தி வெளியிட்டிருந்தது. இதில் ஒரு புகார்தாரர் டயர் மேல் பகுதி உரிந்து வருவதாகவும் இன்னொரு புகார்தாரர் காரை மணிக்கு 100 கிலோமீட்டர் செலுத்தும்பொழுது காரின் டயர் வெடித்ததாகவும் புகார் கொடுத்திருந்தனர்..

இவ்விரு புகார்தாரர்களும் சம்பந்தப்பட்ட கம்பெனியில் புகார் கொடுக்கும்பொழுது, கம்பெனிக்காரர்கள் இதேப்போன்று நிறைய கார் உரிமையாளர்கள் புகார் கொடுத்திருந்ததாக குறிப்பிட்டிருந்தனர்.

ஆனால் தன்னுடைய தவற்றிலிருந்து தப்பித்துக்கொள்ளும் நோக்கில் சைம் டயர் கம்பெனி பழியைக் கார் ஓட்டுனர்கள் மீதே சுமத்திவருகிறது. ஃயர்ஸ்டோன் டயர்ஸ் நிறுவனம் மற்றும் ஃபோர்ட் மோட்டோர் கம்பெனிகள், அதனுடைய



*மேல் தோல் உரிந்த நிலையில் உள்ள உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மொட்டையாக காணப்படும் டயர்*

தரக்குறைவான உற்பத்தியினால் கண்டனங்களுக்கு உள்ளாகியுள்ளன.

அமெரிக்காவின் யூனிரோயல் குட்ரிச் டயர் கம்பெனியின் முன்னாள் ஊழியரான ஒருவர் நல்ல டயர்களோடு உரிந்த டயர்களை கலந்து டயர் உற்பத்தி செய்வது செலவினங்களைக் குறைக்க கடைபிடிக்கப்படும் ஒரு முறையாகும் என்று நீதிமன்றத்தில் சாட்சியம் கூறியிருந்தார்.

கூப்பர் டயரில் ஏற்பட்ட கோளாறுகளுக்காக அதன் உற்பத்தியாளர் மீது 50க்கும் மேற்பட்ட தடவை சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஃபோர்ட் மோட்டோர் கம்பெனிக்கு விநியோகம் செய்த 200,000 டயர்களை கொன்டினென்டல் ஜெனரல் டயர் மீட்டுக்கொள்ளவிருக்கின்றது. இதற்கு அவர்களுடைய டயரின் மேல் பாகம் உரிந்து வருவதே காரணமாகும்.

உலகத்தில் உள்ள மற்ற டயர் கம்பெனிகளின் உற்பத்திகளில் இவ்வளவு மோசமான குறைபாடுகள் இருக்கும்பொழுது, நம்முடைய நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படும் டயர்களின் பாதுகாப்பை முழுமையாக எப்படி நம்புவது?

அமெரிக்காவில் வாகனங்களுக்குப் பொருத்தப்படும் டயர்களின் தரத்தை அமெரிக்க நெடுஞ்சாலை, வாகன, பாதுகாப்பு நிர்வாகம் சோதித்து நிர்ணயம் செய்கிறது. கார்களுக்கு டயரைப் பொருத்தி அவற்றை 50 மைல் வேகத்தில் 34 மணி நேரங்களுக்கு ஓடவிடுவர் இன்னும் ஒரு சோதனையில் 90 நிமிடங்களுக்கு மணிக்கு 70லிருந்து 85 மைல் வேகத்திற்கு ஓடவிடுவர். அமெரிக்க நெடுஞ்சாலை, வாகன, பாதுகாப்பு நிர்வாகம் டயர்களுக்கு இன்னும் கடுமையான சோதனைகளை மேற்கொள்ள திட்டமிட்டிருக்கிறது.

இவ்வாறான நிர்வாகங்களின் மூலம் பயனீட்டாளர்களின் நலன்கள் சிறிது பாதுகாக்கப்படுகின்றன. மலேசியாவில் இதுநாள் வரைக்கும் இதுபோன்ற ஒரு பாதுகாப்பு நிர்வாகம் செயல்படவில்லை.

*(2ம் பக்கத் தொடர்ச்சி)*

**அவ்வாறு பிரச்னையை உண்டாக்க மலேசிய அரசாங்கம் விரும்பவில்லை என்று ஆசியான் வால் ஸ்திரிட் சஞ்சிகைக்கு அறிவித்துள்ளது.**

**மிட்சுபிஷி கம்பெனியும் இப்படித்தான். மிட்சுபிஷி அவர்களுடைய கார்கள் தொடர்பாக 1977லிருந்து நிறைய புகார்களைப் பெற்று வந்திருக்கிறது. இது வரைக்கும் அது மீட்டுக்கொண்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை 700,000 ஆகும். ஆனால் மலேசிய அரசாங்கமும் புரோட்டோன் நிறுவனமும் இதைக் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. தற்பொழுது நம்முடைய சந்தையில் இருக்கும் புரோட்டோன் வாஜாவுக்கான இயந்திரங்களை விநியோகம் செய்வது மிட்சுபிஷிதான்.**

**மலேசியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் புரோட்டோன் கார்கள், வெளிநாடுகளிலிருந்து மறுபடியும் மீட்டுக்கொள்ளப்படுகின்றன என்ற விஷயத்தையும் புரோட்டோன் பொதுமக்களுக்கு அறிவிக்கவில்லை.**

**பிரிட்டனில் இதுவரைக்கும் 1,922 புரோட்டோன் பெர்சோனாஸ் மற்றும் புரோட்டோன் கோம்பெக்குகள் பழுதான டயர்களின் சக்கரத்தில் உள்ள வால்வ் பழுதான காரணத்தினால் சந்தையிலிருந்து மீட்டுக்கொள்ளப் பட்டுள்ளதாக தன்னுடைய சஞ்சிகையின் மூலம் அங்குள்ள மக்களுக்கு அறிவித்துள்ளது. இந்தப் பழுதினால் டயர் காற்று அழுத்தத்தை இழந்துவிடும் என்று அது அறிவித்துள்ளது.**

## மலேசியாவில் சட்டம் இல்லை! மீட்டுக்கொள்வதும் இல்லை

**இப்பொழுது மலேசியாவில் கார்களையும் டயர்களையும் மீட்டுக்கொள்ளும் ஒரு விதிமுறை இல்லை. அது மீண்டுக்கொண்டதும் கிடையாது. கார்களை மீட்டுக்கொள்வது மற்ற நாடுகளில் பரவலாக நடக்கும் வேளையில் மலேசியாவில் மட்டும் அது அமலுக்கு வரவில்லை. அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் கார்கள் மில்லியன் கணக்கில் மீட்டுக்கொள்ளப்படும்பொழுது மலேசியாவில் இதை ஒரு பிரச்னையாகவே யாரும் பார்ப்பதில்லை. மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்பவர்களுக்கும், இறக்குமதி செய்பவர்களுக்கும் எந்த ஒரு மீட்பு தொடர்பான சட்ட திட்டங்கள் இதுவரைக்கும் கொடுக்கப்படவில்லை. கார்களின் பாதுகாப்பு அல்லது பாதுகாப்பற்ற தன்மை தொடர்பாக மக்களுக்கு மலேசிய அரசாங்கத்திடமிருந்து இது வரைக்கும் எந்த தகவலும் கிடைத்ததில்லை.**

**இதுநாள் வரைக்கும் பாதுகாப்பு நடவடிக்கைக் குழுவை அமைத்து வாகன விபத்துக்களுக்கான காரணங்களை ஆராய்வது, இயந்திரம் மற்றும் டயர்களை பரிசோதனை செய்வது, தங்களுடைய வாகனங்கள் தொடர்பாக பயனீட்டாளர்களிடமிருந்து வரும் புகார்களை ஆராய்வது மற்றும் மோட்டார் வாகன உற்பத்தியாளர்கள் தங்களுடைய உற்பத்தி தொடர்பாக விடுக்கும் கோரிக்கைகள் உண்மைதானா என்பதை நிர்ணயிப்பது போன்ற வேலைகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை**

## பாதுகாப்பற்ற கார்களை இக்கணமே மீட்டுக்கொள்க!

**வெனெசுவேலாவில் நிகழும் விபத்துக்களை ஆய்வு செய்து, உடனடி நடவடிக்கை எடுக்க பெரிய அமைப் ஒன்று உள்ளது. வெனெசுவேலாவைப் போன் மலேசியாவும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.**

**இதேப்போன்று அமெரிக்காவிலும் உற்பத்தி செய்யப்படு கார்களின் தரத்தை நிர்ணயிக்கவும், விபத்துக்கா காரணங்களை ஆராயவும், பயனீட்டாளர்களுக் வாகனங்கள் தொடர்பான விபரங்களைக் கொடுக்கவ அமைப்பு உண்டு. இதையே மலேசியாவும் பின்பற் வேண்டும்.**

**ஜப்பானையும் பிரிட்டனையும் போன்று க வாங்குனர்களிடமிருந்து கார் தொடர்பாக வரு புகார்களைக் கார் உற்பத்தியாளர்கள் போக்குவரத் அமைச்சு அல்லது பயனீட்டாளர் பாதுகாப்பு ஏஜன்சியி புகார் செய்யுமாறு சட்டத்தைக் கொண்டு வர வேண்டு மலேசிய புத்ரா பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் சால பாதுகாப்பு ஆய்வுக் கழகத்தைப் பயன்படுத் மலேசியாவில் உள்ள வாகனங்கள் பாதுகாப்பு மற் விபத்து தொடர்பான ஆய்வை மேற்கொள்ள வேண்டு இது தொடர்பாக நம் நாட்டு ஆய்வாளர்கள் மேற்கொன் ஆய்வுகள் புத்தகங்களாக புதைந்து கிடக்கா மக்களின் பார்வைக்கும் சிந்தனைக்கும் கொண்டு வரப் வேண்டும்.**

**எப்பொழுதுமே வாகன விபத்துக்களுக்கு ஓட்டுனரை குறை சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது. ஓட்டுன அலட்சியப்போக்கினால் ஏற்பட்ட விபத்துக்களுக்கு சட் அவரைத் தண்டிக்கும்பொழுது உற்பத்தியாளர்கள அலட்சியப்போக்கிற்கும் ஏற்படும் ஆபத்துக்களுக் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.**

**1999ல் நிகழ்ந்த 223,116 விபத்துக்களுக்கும் அதன ஏற்பட்ட 5,761 மரணங்களுக்கும் காரை அலட்சிய ஓட்டியதுதான் காரண்மா? ஆயிரத்துக்கும் மேற் வாகனங்களில் கோளாறுகள் இருந்திருக்கலாம். கோளாறினால் ஓட்டுனர் வாகனத்தைக் கட்டுப்ப முடியாமல் போயிருக்கலாம். அதோடு ஆயிரத்து மேற்பட்ட டயர்களில் கோளாறுகள் இருந்திருக்க ஆனால் மலேசியர்களுக்கு இது தெரிந்திருக்கு இன்னும் அதிக உயிர்கள் பலியாவதற்கு மு மீட்டுக்கொள்ளுங்கள்.**

படிப்பகம்

www.padippakam.com



# நலந்தானா?



சுவாமி
பிரம்மானந்த சரஸ்வதி
எழுதுகிறார்!

நமது குழந்தைகள் நமது செல்வங்கள். நாம் பாதுகாக்காவிட்டால் பழுது போவார்கள். பார்க்காமல் பயிர் கெட்டது. கேட்காமல் கடன் கெட்டது. நம் குழந்தைகளை நாம் கண்காணிக்காவிட்டால் பயிரைக் காளான்கள் அழிப்பது போல நமது குழந்தைகளை தீய பழகங்கள் பற்றிக்கொள்ளும். வேண்டாத வழக்கங்கள் ஒட்டிக்கொள்ளும்.

# பழகாதது படியாது

பழகாதது படியாது. படியாதது விடியாது. குழந்தைகள் நல்லவர்களாக வளர வேண்டும் என்றால் முதலில் அவர்கள் எல்லோரையும் வணங்கிப் பழக வேண்டும். வணக்கம் பணிவை வளர்க்கும். பணிவு பண்பை வளர்க்கும்.

நமது இன்றைய குழந்தைகளைச் சற்று உற்றுப்பார்த்தால் அவர்கள் செயல்களெல்லாம் சேட்டைகளாக இருக்கின்றன. கைகளில் தேவையில்லாத அசைவு. கால்களில் அளவுக்கு மீறின ஓட்டம். உடலில் ஒரு பதட்டம். அவன் நின்றே பேசுவது கிடையாது. எல்லாவற்றையும் செய்கை மூலமாக உணர்த்துகின்றான்.

வார்த்தைக் குப்பைகளில் சிக்கிக்கொண்டு நல்ல சொற்களைத் தொலைத்து விடுகின்றான். முதலில் அவன் என்ன பேசுகின்றான் என்றே தெரியவில்லை. தமிழை மலாயாகப் பேசுகின்றான். ஆங்கிலத்தைத் தமிழாகப் பேசுகின்றான். வார்த்தைகளில் இப்படித் தடுமாறுகிறான் என்றால் வாழ்க்கையில் எப்படி பீடு நடைபோடுவான்?

குழந்தை வளர்ப்பு ஒரு பெரிய கலை. அதைச் சிறு வயதிலிருந்தே உணர்ந்து செய்தால்தான் நல்ல குழந்தைகளாக வளர்வார்கள். இவர்கள் வளர்ச்சியில் பெற்றோர், ஆசிரியர், சமுதாயம் எல்லோருக்குமே பெரிய பங்குண்டு. குழந்தைகளை ...த்து வளர்ப்பது தவறு. கண்மூடித்தனமாக ...வதும் தவறு. கண்டித்து வளர்ப்பதே சிறப்பு.

...டிப்பு என்பது வார்த்தையில் பார்வையில் இருக்க ...ண்டும். அது செய்கைக்கு வந்தால் அது வன்முறையாகும். ...தை தமையனை அடித்தால் தமையன் தம்பியை ...க்கிறான். தம்பி தங்கையை ...க்கிறான். இந்தப் பழி வாங்கும் ...ர்ச்சியே தொடர்ந்து ஒரு ...தாயத்திற்கு தாரை ...ந்துத் தரப்படுகிறது.

...ந்தைகள் ...படாதவர்கள். ...களை முரட்டுத் ...மாகக் ...ண்டால் நம்மிடம் ...டு பிடிப்பார்கள். ...வர்களிடம் ...டுத்தனமாக நடந்து ...வார்கள்.

...ஆசிரியர் மாணவனை ...டித்தனமாக அடித்தால் ...மாணவன் ஆசிரியரைத் திருப்பி அடிப்பதில்லை. ஆனால் அந்த வன்மையை மற்ற மாணவர்களிடம் காட்டுகிறான். முடவனை முரடன் அடித்தால் முரடனை முனி அடிக்கும் என்பார்கள். இதுபோல பலவீன-மானவர்களைப் பலவான் அடிப்பது வன்முறை.

எனவே வன்முறை என்பது முதலில் வீட்டில்தான் தொடங்குகின்றது. வன்முறைக்கு ஆசான் தந்தையே. அது பள்ளிகளில் ஆசிரியர் மூலமாக தொடர்கிறது. இங்கு பாதிக்கப்பட்ட இந்த மாணவன், சமுதாயத்தில் புகுந்ததும் தனது பலத்தை அவர்கள் மேல் காட்டும்பொழுது வன்முறை சமூகம் பிரசவமாகிறது.

எனவே வன்முறைக் கலாச்சாரம் என்பது திடீரென்று சமூகத்தில் தோன்றிய பிரச்னை அல்ல. காலாகாலமாக ஒரு தனி மனிதனுக்கு இழைக்கப்பட்ட கொடுமை, வாய்ப்பின்மை, புறந்தள்ளப்பட்ட வேதனை, ஒதுக்கப்பட்ட அவமான உணர்ச்சி, உரிமைகள் மறுக்கப்பட்ட இழிவு நிலை.

இவை யாவும் ஒரு இளைஞன் வன்முறை செயல்களில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைகின்றன. இந்த மனப் பாதிப்புக்களிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க பெற்றோர்களின் முதல் கடமை குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைச் சொல்லி வைப்பதுதான்.



முதலில் குழந்தைகளை எல்லோரையும் வணங்கச் சொல்ல வேண்டும். வணங்குபவர்கள் பணிகிறார்கள். பணிபவர்கள் வளர்கிறார்கள். வளர்பவர்கள் வணங்கப்படுகிறார்கள். வணக்கம் மனமகிழ்ச்சியைத் தருகின்றது. மனமகிழ்ச்சி மனவளர்ச்சியைத் தருகின்றது. மனவளர்ச்சி உள்ளத்தில் புத்துணர்ச்சியை ஏற்படுத்துகின்றது. புத்துணர்ச்சி செயல்திறனை வளர்க்கிறது. செயல்திறன் நம்பிக்கை ஊட்டுகிறது. நம்பிக்கை எல்லாம் என்னால் முடியும் என்ற தெளிவைத் தருகிறது. தெளிவு அறிவில் முதிர்ச்சியைத் தருகிறது.



இசைக்கருவிகள் இளம் உங்களை பண்படச்செய்யும். குழந்தைகளுக்கு நமது கலாச்சாரத்தை ஊட்டினால் அவர்கள் திசைமாறி தொலைந்துபோகமாட்டார்கள்.

குழந்தைகள் கரை படாத கைகள். கள்ளமில்லாத உள்ளங்கள். இவர்கள் மனம் நெகிழ்ந்து கையை உயர்த்தினால் தெய்வமும் இரங்கும். இவர்களுக்கு வழிபாடு என்பது இயல்பாக வரும். இதைப் பெற்றோர்கள் சற்று அழுத்தி உணர்த்தும்போது இவையே பிரார்த்தனையாக மலர்கிறது. குழந்தைகளின் உள்ளத்தில் தெம்பையும் தெளிவையும் ஏற்படுத்துகிறது.

இறை வணக்கத்தின் மூலமாக குழந்தைகளை நெறிப்படுத்துவது

**இவர்களுக்குத் தேவை நல்ல வழிகாட்டலும் சில சமய போதனா முறைகளும்தான். இவற்றை வழி நடத்த சில தியாக உள்ளங்கள். தன்னலமற்ற மனங்கள். ஓடோடி தொண்டு செய்யும் திருநாவுக்கரசர்கள். அன்பாக அரவணைக்கும் உதவும் கரங்கள்.**

அவர்களை வன்முறை கலாச்சாரத்-திலிருந்து காப்பாற்றுவதாகும்.

இறைவழிபாடு என்பது தேவாரத் திருவாசகங்களை பாராயணம் செய்வது மட்டுமல்ல. நல்ல நுண்கலைகளைப் பயில்வதும் இறைவழிபாடே. மந்திரங்கள் ஓதுவதும் பஜனைகள் பாடுவதும் மட்டுமல்ல, பரதம் ஆடுவதும், சிலம்பம் சுழற்றுவதும் இறைவழிபாடே. இசைக்கருவிகளை மீட்டுவதும் உருமி மேளங்களைக் கொட்டுவதும் இறைவழிபாடே. நமக்குப் பாட்டும் பரதமும் இறைவனே. ஆடுவதும் பாடுவதும் வழிபாடே. உழைப்பதும் உண்ணுவதும் சிவமே. செய்யும் தொழிலே தெய்வம். இப்படி எதிலும் இறை. எங்கும் தெய்வீகம்.

எனவே குழந்தைகளையும் இளைஞர்களையும் சற்றே நமது பாரம்பரியத்தை நினைவூட்டி நமது கலாச்சாரத்தைப் புகட்டினால் இவர்கள் திசை மாறிய பறவைகளாக தொலைந்துபோக மாட்டார்கள். நமது அரவணைப்புக்குள் மடைமாற்றம் செய்யப்பட்டால் மாசில்லா வைரமாக ஜொலிப்பார்கள்.

இவர்களுக்குத் தேவை நல்ல வழிகாட்டலும் சில சமய போதனா முறைகளும்தான். இவற்றை வழி நடத்த சில தியாக உள்ளங்கள். தன்னலமற்ற மனங்கள். ஓடோடி தொண்டு செய்யும் திருநாவுக்கரசர்கள். அன்பாக அரவணைக்கும் உதவும் கரங்கள். நம்மிடையே இப்படிச் சில தியாகச் சுடர்களை உருவாக்கினால் வன்முறை என்ற தீ பொசுங்கும்.

இதைவிடுத்து வன்முறை இனம் என்று நம் மேல் குத்தப்பட்ட முத்திரையை ஊர்ஜிதப்படுத்துவது போல ஊரெல்லாம் போஸ்டர் ஒட்டி புலம்பி வைத்தால் பிரச்னை தீர்ந்துவிடுமா?

இந்தியர்களே சற்றே சிந்தியுங்கள். விடிவதற்குள் விழித்துக்கொள்வோம். இல்லையென்றால் பிணங்கள் என்று புதைத்துவிடுவார்கள். அப்படியே மாண்டுபோனாலும் நம் மேல் வன்முறை கும்பல் என்ற வாடை வீசலாமா?

படிப்பகம்

www.padippakam.com



# ஆபத்தை அள்ளித் தரும் மருந்து அலர்ஜி

## ஸ்டீவன் ஜோன்சன் சின்ட்ரம் உங்கள் மருந்தில் இருந்துகொண்டு அமைதியாகக் கொல்லும்

**இரு வேளை என்டிபையோடிக் மற்றும் காய்ச்சல் மருந்துதான், 7 வயது யூஸ்ரியின் வாழ்க்கையையே மாற்றிவிட்டது - அவனுடைய கண்கள் வீங்கி, உடலிலும் முகத்திலும் கொப்புளங்கள் ஏற்பட்டு சதை அப்படியே பிய்த்துக்கொண்டு வந்தது. இப்பொழுது, 6 மாதங்களுக்கு பிறகும் கூட அவனுடைய கண்கள் இன்னமும் வீங்கிப்போய் இருக்கின்றன. (அவருடைய வலது கண் நிரந்தர சேதத்திற்கு உள்ளாகிவிட்டது). அவனுடைய உடலோ அவன் பட்ட வேதனையைச் சித்தரிக்கும் வகையில் வடுக்கள் நிறைந்து காணப்படுகின்றன.**

**ஆனால் யூஸ்ரி இன்று உயிரோடு இருக்கின்றான் என்றால் அது அவனுடைய அதிர்ஷ்டம்தான். இப்பொழுது பெரும் அளவில் அதிகரித்து வரும் ஸ்டீவன் ஜோன்சன் சின்ட்ரம் என்ற மருந்து அலர்ஜித் தன்மைக்குத்தான் யூஸ்ரி பலியாகியுள்ளான்.**

ஆரம்பத்தில் யூஸ்ரிக்கு சாதாரண காய்ச்சல்தான் ஏற்பட்டது. ஆனால் 5 நாட்களுக்குக் காய்ச்சல் நீடித்ததால், யூஸ்ரியின் தாயார் அவனைப் பினாங்கு, பாத்து லஞ்சாங்கிலுள்ள கிளினிக்கிற்கு அழைத்துச் சென்றார். டாக்டர் அவனுக்கு என்டிபையோடிக்கும் காய்ச்சல் மருந்தும் கொடுத்து அனுப்பினார்.

ஆனால் காய்ச்சல் தணிவதற்குப் பதிலாக இன்னும் மோசமாகியது. அடுத்த நாள் யூஸ்ரியை மறுபடியும் அதே கிளினிக்கிற்கு அவனுடைய பெற்றோர் கொண்டு சென்றனர். இன்னொரு மருத்துவர் அவனுக்கு அம்மை கண்டிருப்பதாகக் கூறி, கண்களுக்கு தடவுவதற்கு கிரீம் ஒன்றை கொடுத்தனுப்பினார்.

ஒன்பது நாட்களுக்குப் பிறகு அவனுடைய நிலைமை இன்னும் மோசமானது. இம்முறை மிகக் கடுமையான பக்க விளைவுகள் தோன்றின. கண்கள் வீங்கிப் பார்வை மங்கியது. முகமும், உடலின் இதர பாகங்களும் வீங்கி எரிந்துபோனது போல் காணப்பட்டது.

யூஸ்ரிக்கு மோசமான நோய் கண்டிருப்பதாக நினைத்த அவனுடைய தந்தை அவனை லம் வா ஈ தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். அங்கு அவன் 8 நாட்களுக்குத் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டான். பிறகு ஒரு மாதத்திற்கு அவன் தனித்து வைக்கப்பட்டான்.

சென்ற 9.8.2000 யூஸ்ரியை கோலாலம்பூர் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். யூஸ்ரியின் விழி வெண்படலம் முழுவதுமாக சேதமடைந்துவிட்டது எனவும் அதனை மாற்றிப்பொருத்துவதற்கு மவெ. 100,000 செலவாகும் என்று மருத்துவ அறிக்கை கூறுகிறது.

லம் வா ஈ மருத்துவமனையில் அவனுக்குச் செலவான மவெ. 4,000த்தை மருத்துவமனை வசூல் செய்யவில்லை. யூஸ்ரிக்கு மாற்றுக்கண் பொருத்துவதற்காக நிதி திரட்டும் பிரச்சாரம் தொடங்கியுள்ளது. அக்டோபர் 10ம் தேதி வரைக்கும் மவெ. 13,000 திரட்டியாகிவிட்டது.



*கொப்புளங்கள் போன்ற புண்கள் யூஸ்ரியின் உடல் முழுவதிலும் பரவி உள்ளன- இவற்றில் சில வெடித்து உடலை ரணமாக்கியுள்ளது. இவருக்கு ஸ்டீவன் ஜோன்சன் சின்ட்ரம் (அவர் உட்கொண்ட மருந்தினால் ஏற்பட்ட அலர்ஜி) ஏற்பட்டுள்ளது. இந்த அலர்ஜியினால் சில வேளைகளில் மரணமும் ஏற்படலாம்.*

### ஸ்டீவன் ஜோன்சன் சின்ட்ரம் என்றால் என்ன?

ஸ்டீவன் ஜோன்சன் சின்ட்ரம் என்பது அபரிமிதமான அலர்ஜித்தன்மையைக் குறிப்பதாகும். ஆனால் சில பாக்டேரியா மற்றும் வைரஸ் தொற்றுநோய்க் கிருமிகளினாலும் இது ஏற்படும்.

என்னென்ன மருந்துகள் ஸ்டீவன் ஜோன்சன் சின்ட்ரமை உருவாக்கும் தன்மை கொண்டவை என்பதைப் பக்கத்தில் உள்ள அட்டவணையில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். சில சமயங்களில் நாம் சாதாரணமாக தலை வலிக்கும் காய்ச்சலுக்கும் உட்கொள்ளும் பேரசெட்டமோல் கூட இந்த அலர்ஜித் தன்மையை உண்டாக்கும்.



*ஒரு கண்ணில் பார்வை போனது, 7 வயதாகும் யூஸ்ரி தன்னுடைய வலது கண்ணில் பழுதாகியிருக்கும் விழிவெண்படலத்தை மாற்றிப் பொருத்துவதற்கு மவெ.100,000 தேவைப்படுகிறது.*

ஸ்டீவன் ஜோன்சன் சின்ட்ரம் ஏற்படுவது அரிது என்று அகராதிகள் கூறுகின்றன. ஆனால் தற்பொழுது உள்ள நிலைமையில் நிறைய பேர் ஸ்டீவன் ஜோன்சன் சின்ட்ரமால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அமெரிக்காவில் ஸ்டீவன் ஜோன்சன் சின்ட்ரம் ஏற்பட்டவர்களில் 3-15% இறந்துபோயுள்ளனர்.

ஸ்டிவன் ஜோன்சன் சிண்ட்ரம் கண்டுபிடிப்பது சிரமம். சுகாதார நிபுணர்களின் கூற்றுப்படி, மருந்து உட்கொண்ட 2 வாரங்களுக்குப் பிறகு தொடங்கும். வழக்கமாக ஏற்படும் காய்ச்சல் மற்றும் தோல் சிவப்பேறுதல் போன்றவை ஏற்படும். இது தொடங்கி விட்டால் இதனை நிறுத்துவதற்கு எதுவும் கிடையாது.

அதனால் பயனீட்டாளர்கள் மருந்துகளை உட்கொள்ளும் பொழுது கவனம் தேவை. உங்கள் குடும்பத்தில் யாருக்காவது மருந்தினால் இலேசான அலர்ஜி ஏற்பட்டிருந்தாலும் கூட நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதே வேளை அரசாங்கம் பொதுமக்களுக்கும் இதன் ஆபத்தைப் பற்றி எடுத்து சொல்ல வேண்டும்.

### ஸ்டீவன் ஜோன்சன் சின்ட்ரமை ஏற்படுத்தும் மருந்துகள் யாவை?

**வீக்கத்தைக் குறைக்கும் மருந்துகள் உதாரணம் எனல்ஜெசிக்ஸ் மற்றும் வலி மருந்து: indomethacin( Indocid, Indocap, Methacin), ibuprofen (Brufen , Ibufen) aspirin ( Aspalgin, Codis, Ecotrin)**

**தொற்றுநோய்களைக் குணப்படுத்த உபயோகப் படுத்தப்படும் என்டிபையோட்டி வருமாறு:**

- **சல்பர் வகைகள் - sulphamethoxazole (Bactrim, Septrim, Suprim) sulphadiazine (Triglobe, Tiazine) sulphamethopyrazin (Kelfiprim)**
- **பெனிசிலின் வகைகள் : ampicillin (Ampillin, Ampicap), amoxycillin (Amoxil, Amoxin, Amoxicap), bacampiciline (Penglobe)**
- **தெத்ராசைக்கிளின் வகைகள் : tetracycline (Tetracap, Tetracin), minocycline (minocin)**
- **வலிப்பு எதிர்ப்பு மருந்துகள்: phenytoin sodium (Dilantin) காக்கைவலிப்பு நோய்க்குள்ளது.**
- **பூஞ்சையை எதிர்க்கும் மருந்துகள் : griseofulvin (Fulxin fulcin)**
- **பார்பிசுரேட்ஸ் phenobarbiton (Phenobarbitone )**
- **புற்றுநோய் மருந்துகள் mitomycin (Mitomycin)**
- **அல்சர் மருந்துகள்: cimetidin (Tagamet, Cimetidine)**
- **இருமல் மருந்துகள் : codei Promedyl, Hosedyl, Phensedyl)**
- **நீரிழிவு நோய் மருந்துகள் chlorpropamide (Diabenese, Propamid**
- **எண்டிஈஸ்தமின்ஸ் chlorp mazine (Chlorpromazine, Largact thioridazine (Apo-Thioridazine, Melle**
- **மலேரியா எதிர்ப்பு மருந்துகள sulfadoxine (Fansidar)**
- **தொழுநோய் மருந்துகள் clofazimine (Lamprene)**

***குறிப்பு : ஆங்கிலத்தில் கொடுக் பட்ட பிரண்டுகளின் பெயர் அடைப்புக் குறிக்குள் போ பட்டிருக்கிறது.***

படிப்பகம்

www.padippakam.com



## மோட்டார் காப்புறுதிப் பிரிவு

# மோதிவிட்டு ஓட்டம் பிடிக்கும் பிரச்னைகளுக்குப் பாதுகாப்பு வழங்காதா?

விபத்தில் மாட்டிக்கொள்வதும் ஒருவருக்குப் பல விதத்தில் மன உளைச்சல்களையும் பிரச்னைகளையும் ஏற்படுத்துவதாக இருக்கிறது. ஆனால் விபத்தில் சம்பந்தப்பட்ட இன்னொரு தரப்பினர் காப்புறுதி எடுத்திருக்கவில்லை என்றால் உங்களுடைய நிலை என்ன? அதைவிட மோசம். உங்களை மோதித் தள்ளியவர் ஓட்டம் பிடித்துவிட்டாலோ அவருடைய வாகன எண் உங்களுக்குத் தெரியாத பட்சத்தில் உங்களுடைய நிலை என்ன?

இவ்வாறு இழப்பீடு கிடைக்க வழி இல்லாத வாகனமோட்டிகளுக்கு, உதவுவதற்கென சில நாடுகளில் மோட்டார் காப்புறுதிப் பிரிவை நிறுவியுள்ளனர். ஆனால் நம் நாட்டில்தான் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. நம் நாட்டில் மோட்டார் காப்புறுதி பிரிவு இருந்தும் அதில் சில குறைபாடுகள் இருக்கின்றன.

காப்புறுதி வைத்திராத ஒருவரினால் உங்களுக்கு விபத்து ஏற்படும்பொழுது அவர் மூலம் மூன்றாம் தரப்பு காப்புறுதி நன்மைகள் கிடைக்காத பட்சத்தில் அவருக்கு மோட்டார் காப்புறுதிப் பிரிவின் மூலம் சிறிது தொகை கிடைக்கலாம்.

ஆனால் மற்றொரு வாகனம் உங்களுடைய வாகனத்தை மோதிவிட்டு ஓட்டம் பிடித்துவிடும் பிரச்னையில் வாகனத்தைக் கண்டுபிடிக்கும் வரையில் மோட்டார் காப்புறுதிப் பிரிவுவிலிருந்து எந்த வித உதவியும் கிடைக்காது. (முன்பு ஒரு காலத்தில் அப்படி அல்ல)

இப்பிரச்னை தொடர்பாக பி.ப.சங்கம் சென்ற வருடம் அக்டோபர் மாதத்தில் போக்குவரத்து அமைச்சர் டாக்டர் லிம் லியோங் சிக்கிற்குக் கடிதம் எழுதி மோட்டார் காப்புறுதிப் பிரிவு மோதித்தள்ளிவிட்டு ஓட்டம் பிடிக்கும் புகார்களையும் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டது. அப்படிச் செய்யாத நேரத்தில் அதனுடைய நோக்கத்திற்குப் புறம்பாக இருக்கும் என்றும் எடுத்துரைத்தது.

இப்பிரச்னை தொடர்பாக அமைச்சிடமிருந்து பதில் வராத காரணத்தால் அவர்களுக்கு இரு நினைவுக் கடிதங்களை அனுப்பினோம். அப்பொழுதும் அமைச்சிடமிருந்து பதில் வராத காரணத்தால் அமைச்சு பதில் கொடுக்காத விஷயத்தை பொதுப் புகார் பிரிவுக்குப் புகார் செய்தோம். அதன் பிறகு ஜூலை 2000ல் எங்களுக்கு அமைச்சிடமிருந்து பதில் வந்தது.

இப்பிரச்னை மிகவும் ஆழமான பிரச்னையாக இருப்பதால் இதற்கு முடிவு எடுப்பதற்கு இன்னும் அதிக காலம் பிடிக்கும் என்று அமைச்சு பதில் கொடுத்திருந்தது.

து ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பதில் அல்ல. 1992ல் மாட்டார் காப்புறுதிப் பிரிவு ஒப்பந்தத்தில் பாக்குவரத்து அமைச்சும் கையெழுத்திட்டுள்ள ரணத்தால் இப்பிரச்னையை அவர்கள் றப்போடுகிறார்களா?

## மோட்டார் காப்புறுதிப் பிரிவு செயல்படுவது எதற்காக?

ாட்டார் வாகன விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ாயம் வழங்கப்படும் வரையில் நியாயம் லநாட்டப்படவில்லை என்றுதான் அர்த்தம்.

லையில் ஓடும் வாகனங்களுக்கு மோட்டார் காப்புறுதி சியம் என்றாலும், மோட்டார் காப்புறுதிப் பிரிவு லாத தருணத்தில் வாகனம் விபத்துக்கு உள்ளாகும் வருக்கு இழப்பீடு கிடைக்காமல் போக வாய்ப்புக்கள் கம் உள்ளன.

கு ஒருவருக்கு காப்புறுதி இல்லாமல் இருப்பது ஒரு ணமாகும். காப்புறுதி இல்லாத ஒரு காரை சாலை- ஓட்டிச் செல்ல முடியாது. ஏனெனில் காருக்குக் புறுதி இல்லாமல் சாலை வரி எடுக்க முடியாது.

ால் போலி கவர் நோட்டுக்களை உபயோகித்து ல வரி எடுப்பவர்களும் உண்டு. இந்த போலி நோட்டு முடிவு காணாத பழைய பிரச்னையாகும். ப் பிரச்னைக்குக் காப்புறுதிக் கம்பெனிகள் னும் முடிவு காணவில்லை.

டு குறிப்பிட்ட காப்புறுதிப் பாலிசியை வாங்கும் தில் அதற்கு என்னென்ன பாதுகாப்பு உண்டு என்பதை உங்களுக்குத் தவறாக அல்லது தகவல்களை திரித்துக்கூறியும் இருக்கலாம்.



*வாகனமோட்டிகளுக்கு ஏற்படும் விபத்துக்களுக்கு அவர்களுக்குத் தகுந்த இழப்பீடு வழங்காத பட்சத்தில் நியாயம் நிலைநாட்டப்படவில்லை என்றே பொருள் படும்.*

இன்னும் சில தருணங்களில் சில வாகன ஓட்டுனர்கள் இடித்துத் தள்ளிவிட்டு ஓட்டம் பிடித்துவிடுவர். இம்மாதிரியான தருணத்தில் பாதிக்கப்பட்டவருக்கு எதிர்தரப்பினரின் விபரம் தெரியாத காரணத்தால் அவர் கோரிக்கை விடுக்க முடியாது.

## மலேசியாவின் மோட்டார் காப்புறுதிப் பிரிவு

நம் நாட்டின் மோட்டார் காப்புறுதிப் பிரிவு 1968ல் நிறுவப்பட்டது. ஆனால் தற்போதுள்ள மோட்டார் காப்புறுதிப் பிரிவு போக்குவரத்து அமைச்சுக்கும், மோட்டார் காப்புறுதிப் பிரிவுக்கும் இடையே 1992ல் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இவற்றின் உறுப்பினர்கள் காப்புறுதி நிறுவனங்கள் ஆகும்.

1992ம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி, சாலை போக்குவரத்து சட்டம் 1987ன் படி காப்புறுதி பாலிசி வைத்திராதவர்களுக்கு அல்லது பாலிசி செல்லுபடியாகாத தருணத்தில், அவர் மனுச் செய்யும் ஒருவருக்கு அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கோ அல்லது விபத்தில் கொல்லப்பட்டிருந்தால் அவருடைய குடும்பத்தாருக்குக் கருணையின் காரணமாக குறிப்பிட்ட ஒரு தொகையைக் கொடுக்க முன் வரும்.

ஆகையால் ஒருவருக்கு இழப்பீடு கொடுப்பதா வேண்டாமா என்பதனை முடிவு செய்ய வேண்டிய முழு அதிகாரம் மோட்டார் காப்புறுதிப் பிரிவுக்கு உண்டு. ஆனால் இதற்கு முன்பு 1968ல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் இவ்வாறு இல்லை.

1968ம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் மூன்றாம் தரப்பினரின் மேல் நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்படும். நீதிமன்றத் தீர்ப்பின்படி ஒருவருக்கு 28 நாட்களுக்குள் இழப்பீடு கொடுக்கப்படவில்லையானால், அப்போதைய மோட்டார் காப்புறுதிப் பிரிவு நீதிமன்றத்தால் நிர்மானிக்கப்பட்ட தொகையைப் பாதிக்கப் பட்டவருக்குக் கொடுக்கும்.

மோதித் தள்ளிவிட்டு ஓடிவிடும் பிரச்னைகளுக்கு இப்போதுள்ள ஒப்பந்தத்திலும் இதற்கு முன்பு உள்ள ஒப்பந்தத்திலும் குறிப்பாக எதுவும் சொல்லப் படவில்லை என்றாலும், பழைய ஒப்பந்தத்தில் இம்மாதிரியான பிரச்னைகளை தீர்த்து வைத்துள்ளனர். ஆனால் 1980களில் மோட்டார் காப்புறுதி நிறுவனம் அவ்வாறு செய்வதை நிறுத்திக் கொண்டுள்ளது. இது மோட்டார் காப்புறுதியின் நோக்கத்திற்கே எதிரானதாகும்.

## நோக்கம்தான் என்ன?

மோட்டார் காப்புறுதி நிறுவனத்தின் நோக்கம் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதே. அப்படி ஒரு நோக்கத்திற்குப் புறம்பாக நம்முடைய மோட்டார் காப்புறுதி நிறுவனம் செயல்படுவது எந்த இலாபத்தையும் அளிக்காது.

மோதித் தள்ளிவிட்டு ஓட்டம் பிடிக்கும் பிரச்னைகளை நம்முடைய மோட்டார் காப்புறுதி பிரிவு அறவே கண்காணிக்காமல் இருப்பதோடு மட்டுமல்லாமல், இதர சம்பவங்களில் பாதிக்கப்படவருக்கு எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் அல்லது கொடுக்காமலே விட்டு விடுவதா என்பதனை முழுக்க முழுக்க முடிவு செய்வதும் மோட்டார் காப்புறுதிப் பிரிவே.

அரசாங்கம் சமுதாய நீதியை நிலைநாட்ட விரும்பினால் அவர்கள் செய்ய வேண்டியது புதிய மோட்டார் காப்புறுதி ஒப்பந்தத்தைக் கொண்டு வருவதே ஆகும். இந்த ஒப்பந்தத்தில் மோட்டார் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேறு விதங்களில் இழப்பீடு கிடைக்காத பட்சத்தில் மோட்டார் காப்புறுதிப் பிரிவிலிருந்து இழப்பீடு கிடைக்குமாறு அமைந்திருக்க வேண்டும்.

பயனீட்டாளர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தாத மோட்டார் காப்புறுதிப் பிரிவைக் கொண்டு வருவதிலும் அரசாங்கம் முனைப்பு காட்ட வேண்டும். இந்தத் திட்டத்தின் மூலம் விபத்தில் பாதிக்கப்பட்ட எல்லா வாகன ஓட்டிகளுக்கும் இழப்பீடு கிடைக்குமாறு அமைந்திருக்க வேண்டும். இம்மாதிரியான ஒரு திட்டத்தில் வழக்கறிஞர்கள் தேவைப்படாது.

படிப்பகம்

www.padippakam.com






மார்க்கட் ஸ்திரிட்டில் நடைபாதையில் பொருட்கள் சிதறிக்கிடக்கின்றன



கிங் ஸ்திரிட்டில் முழுமையாக மூடப்பட்ட நடைபாதை




பினாங்கு, கொம்தாரில் பாதசாரிகள் நடக்கும் இடத்தை மேடை ஒன்று அடைத்துக்கொண்டிருக்கிறது.



கோலா கங்சார் சாலையில் உள்ள சௌராஸ்தா மார்க்கட்டின் நடைபாதைகளைப் பாருங்கள்



மார்க்கட் ஸ்திரிட்டில் முழுமையாக மூடப்பட்ட நடைபாதை



நடைபாதையை அடைத்துக்கொண்டிருக்கும் மோட்டார் சைக்கிள்களும் கட்டுமானப் பொருட்களும்

# நடைபாதையில் நடக்க முடியவில்லை

கடைகளில் ஓரங்களில் பாதசாரிகளுக்கு என உள்ள நடைபாதைகளில் நடந்து சென்றுகொண்டிருக்கிறீர்கள். திடீரென்று நடைபாதை காணாமல் போய் சாலையில் நடக்க வேண்டிய நிலை உங்களுக்கு ஏற்படுகிறது.

இவ்வாறு சாலை ஓரங்களில் உள்ள நடைபாதைகள் காணாமல் போய் பாதசாரிகள் நடைபாதைகளில் நடப்பதற்குப் பதிலாக சாலைகளில் நடக்க வேண்டி நிலை. இவ்வாறான நிலை உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் பயங்கர சாலை விபத்துக்கு உள்ளாக்கும் என்பதனை நீங்கள் அறிவீர்களா?

அதோடு பாதசாரிகளாக உங்களுக்கு உள்ள உரிமையம் பறிக்கப்பட்டிருக்கிறது என்பதனை நீங்கள் அறிவீர்களா? சட்டத்தில் பாதசாரிகளின் உரிமைகளும் பாதுகாக்கப் படுகின்றன.

சாலை ஓரங்களில் உள்ள நடைபாதைகளில் பெரும்பாலும் துணிமணிகள், புத்தகப்பைகள், மோட்டார் வண்டிகள், கட்டுமானப் தளவாடங்கள் இவையெல்லாம் வைக்கப்பட்டிருப்பதை நாம் பார்த்திருப்போம்.

இதே நடைபாதைகளில் சிறு அளவிலான உணவு மற்றும் துணி வியாபாரத்தையும் நடத்தி வருவர்.

இப்படி நடைபாதைகளை பொருட்களைக் கொண்டு நிரப்பி வைத்திருப்பது ஒரு குற்றச் செயல் என்று உங்களுக்குத் தெரியுமா என்று கேள்வி எழுப்பியதற்குப் பெரும்பாலோர் தெரியாது என்றே பதில் அளித்தனர்.

இன்னொரு விஷயம் என்னவென்றால் நடைபாதை தொடர்பான சட்டங்கள் இருந்தும் அது அமல்படுத்தப்படாமல் இருப்பதுதான்.

இந்த நடைபாதை தொடர்பாக பி.ப.சங்கம் ஓர் ஆய்வை மேற்கொண்டது. அந்த ஆய்வின்படி மார்க்கட் ஸ்திரிட், கிங் ஸ்திரிட் மற்றும் இன்னும் இதர சாலைகளில் உள்ள நடைபாதைகளில் சைக்கிள், மோட்டார் சைக்கி துணிமணிகள், விசிடிகள் அஞ்சடியின் நடுவ வைக்கப்பட்டிருந்தன. அதோடு பாதசாரிகளு என ஒதுக்கப்பட்ட இடங்களில் அவர்கள் நடக்கா இருப்பதற்கென இரும்புக் கம்பிகளை வேறு பொரு வைத்துள்ளார்கள்.

சாலை, கால்வாய் மற்றும் கட்டிடம் சட்டம் 1974 பிரிவ (1) (a) & (b) மற்றும் பிரிவு 47 3(a)ன் படி ஒருவர் தி சாக்கடை அல்லது சாலை ஓரங்களில் உள்ள இ களை முன் அனுமதி இல்லாமல் எந்தப் பொருட்க யாவது கிடத்தி வைத்தாரானால் அல்லது எதைய கட்டியிருந்தால் தவறு இழைத்தவர் ஆவார். அவ மவெ. 500க்கு மேற்போகாத அபராதம் விதிக்கப்

அதோடு கிடத்தி வைக்கப்பட்டிருக்கும் பொருட் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அப்புறப்படுத்தி விடுவ அல்லது வேறு பொருத்தமான இடத்திற்கு ம செய்ய முடியும்.


www.padippakam.com



## தொலைக்காட்சியில் சூதாட்டம்

# அந்த சூதாட்ட லட்சாதிபதி யார்?

நீங்கள் லட்சாதிபதி ஆகுவதற்கு ஒரு தொலைபேசி அழைப்பு வழிவகுத்துவிடும் என்று இப்பொழுது அதிக மலேசியர்கள் நினைத்துக் கொண்டு வருகின்றார்கள்.



மலேசியாவில் ஒளிபரப்பு செய்யப்படுகின்ற நிகழ்ச்சியில் பிரபல நடிகர் ஜாலாலுடின் ஹாசானுடன் ஒரு போட்டியாளர்

மலேசியாவின் தனியார் தொலைக்காட்சியில் இடம் பெற்று வரும் ஊ வான்ஸ் டு பி எ மில்லியனோ் (Who wants to be a millionaire) என்ற யார் லட்சாதிபதியாக போகின்றீர்கள் என்ற நிகழ்ச்சியினால் கவரப்படாதவர்கள் யாருமே இல்லை.

இதே நிகழ்ச்சி இப்பொழுது இந்தியாவிலும் (கௌன் பனேகா க்ரோர் பதி) தாய்லாந்திலும் ஒளிபரப்பப்பட்டு பிரபலம் அடைந்து வருகிறது.

நமது தொலைக்காட்சியில் முன்பு பிரதான செய்தி நேரமான இரவு 8.00 மணிக்கு ஒளிபரப்பப்பட்டு வந்த இந்நிகழ்ச்சி, தகவல் அமைச்சின் தலையீட்டினால் வார நாட்களில் இரவு 7.30லிருந்து இரவு 9.00 மணி வரையில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.



இந்தியாவில் ஒளிபரப்பாகும் யார் லட்சாதிபதியாகப் போகிறீர்கள் நிகழ்ச்சியில் அமிதாப் பச்சனுடன் ஒரு போட்டியாளர்

இந்தியாவின் ஸ்டார் டிவியில் இந்நிகழ்ச்சி திங்கட்கிழமைகளிலிருந்து வியாழக்கிழமை வரை இரவு 9.00 மணிக்குத் தொடங்கி சுமார் 50 நிமிடங்களுக்கு ஒளிபரப்பாகின்றது.

இந்நிகழ்ச்சி ஒரு சூதாட்டம் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. சில கேள்விகளுக்குப் பதில் சொல்லுகின்ற பலர், பல கேள்விகளுக்கு அதிர்ஷ்டத்தினாலேயே வெற்றி அடைகின்றனர்.

அதிர்ஷ்டம் என்பதும் ஒரு சூதாட்டம்தான்.

திடீரென்று கட்டுக்கட்டாகப் பணம் வரும் என்றால் எவர்தான் சந்தோஷப்படமாட்டார்கள். இப்படிப்பட்ட அதிர்ஷ்டம் இது போன்ற நிகழ்ச்சிகளின் வழி கிடைக்கப் போகிறது, என்றால் யாருக்குதான் இதில் கலந்து கொள்ள ஆசை வராது.

இந்தப் போட்டிக்கு தேர்வு செய்யப்படுபவர்கள் தங்களின் அதிர்ஷ்டத்தால்தான் தேர்வு செய்யப்படுகின்றார்கள் என்பதை நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்களே ஒப்புக்கொண்டுள்ளனர்.

காலை 7.00 மணியிலிருந்து இரவு 7.00 மணி வரைக்கும் தொலைபேசி அழைப்பு செய்தால், முதல் ஒரு நிமிடத்திற்கு வரும் தொகை மவெ. 3.00. அதற்குப் பிறகு தொடரும் ஒவ்வொரு நிமிடத்திற்கும் மவெ. 1.90 என்பது போட்டியில் பங்கேற்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் தெரியும்.

தொலைபேசியில் ஒருவரிடம் கேட்கப்படும் கேள்விக்கு அவர் பதில் சொல்லி முடிக்க வேண்டும். அதோடு அழைப்பு செய்பவர் வலுக்கட்டாயமாக தொலைபேசி வழியாக வரும் விளம்பரத்தைச் செவிமடுக்க வேண்டும். இதனால் அவருடைய தொலைபேசிக் கட்டணம் 30 வெள்ளியை எட்டிவிடும்.

ஆகவே, பெரும்பாலோர் நினைத்துக் கொண்டிருப்பது போல இந்தப் போட்டியில் கலந்துகொள்வது இலவசம் என்பது தவறான எண்ணமாகும்.

மலேசியாவில் நடைபெறும் யார் கோடீஸ்வரராகப் போகின்றீர்கள் என்ற நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்களான டிஜி (Digi) நிறுவனம் தங்களை ஒவ்வொரு நாளும் குறைந்தது 10,000 பேர் தொலைபேசி வழியாக தொடர்பு கொள்வதாக அறிவித்துள்ளது.

வேறு சில நாட்களில் சுமார் 15,000 பேர் கூட, தொலைபேசி வழி தொடர்புகொள்ளுகின்றனராம். இதன் மூலம் இந்த நிறுவனத்திற்குத் தினமும் 3 லட்சம் வெள்ளி கிடைக்கின்றது. இது மாதமொன்றிற்கு மவெ. 9 மில்லியன் வருமானத்தைக் கொடுக்கின்றது.

ஆனால் இது நாள் வரையில் இந்தப் போட்டியில் வெற்றி பெறப்பட்டிருக்கும் தொகை 3 லட்சம் வெள்ளி மட்டுமே. இதில் ஆக அதிகத் தொகையாக மவெ. 125,000 மட்டுமே ஒருவருக்குக் கிடைத்துள்ளது.

இந்தியாவில் அமிதாப் பச்சான் நடத்தும் நிகழ்ச்சியின் முழு வெற்றித் தொகை 100 மில்லியன் ரூபாய். (மவெ. 8.2 மில்லியன்).

இந்நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காக ஏறக்குறைய 20 மில்லியன் இந்திய மக்கள் இந்த சூதாட்ட வலையில் சிக்கிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆகவே ஏமாந்துவிடாதீர்கள். போட்டியின் மூலம் யாராவது ஒருவர்தான் வெற்றி பெற முடியும். ஆனால் தொலைக்காட்சி நிலையம், விளம்பரதாரர்கள் மற்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் இவர்கள்தான் இந்தப் போட்டியின் வழி உருவாகும் மிகப் பெரிய வெற்றியாளர்கள் என்பதனை மறந்துவிடாதீர்கள்.




## சூது விரும்பேல்

- ஔவையார்

சூதாட்டத்தினால் வரும் செல்வம் உழைப்பால் வரும் செல்வம். சூதாட்டத்திற்கும் மூளை உழைப்பு வேண்டாமா என்று கேட்கத் தோன்றும்.

அந்த உழைப்பு உற்பத்தியோடு தொடர்பில்லாதது. எதனையும் உற்பத்தி செய்யாத உழைப்பு வீண். அதை உழைப்புக் கணக்கில் சேர்ப்பதில்லை.

ஒருவன் காலை முதல் மாலை வரை நடந்து கொண்டே இருந்துவிட்டு "நான் நாளெல்லாம் உழைத்தேன். எனக்கு உணவெங்கே?" என்று சமூகத்தைப் பார்த்துக் கேட்க இயலாது. ஏனெனில் அவனது உழைப்பால் சமூகத்திற்கு எந்தப் பொருளும் கிடைக்கவில்லை.

எனவே சூதாடிக்கு வரும் செல்வம் உழைக்காமல் வந்த செல்வம். உழைப்பின்றி ஊதியம் பெற யாருக்கும் உரிமையில்லை. அந்த உரிமை அளிக்கப்பட்டால் நாளடைவில் மனித சமூகமே நசித்துப் போகும்.

உழைப்பின்றி ஊதியம் பெறும் பழக்கத்தை அல்லது உரிமையை மனிதனுக்கு ஏற்படுத்தி விட்டால் அது அவனை விரைவில் பற்றிக் கொள்ளும். எளிதில் நீங்காது.

ஆகவே தான் சூதாட்டத்தை எல்லா நாட்டுச் சிந்தனையாளர்களும் எல்லாக் காலத்திலும் வெறுத்து இருக்கிறார்கள்.

படிப்பகம்

# வன்செயல்



# வம்பு செய்யாமல் வழி தேடுவோம்!

வன்முறை, சமுதாயத்தையே கதி கலங்க வைக்கின்ற ஒரு சொல்லாக விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது. இந்திய இளைஞர்களிடையே வன்முறை தொடர்பான பழக்கங்கள் அளவுக்கு அதிகமாக இருக்கின்றது என மீண்டும் ஒரு முறை காவல்துறையினர் அறிக்கை விட்டவுடன், ஆளுக்கு ஆள் மேற்கருத்து சொல்ல படையெடுத்துவிட்டனர்.

இதேப்போன்ற கருத்தைக் கடந்த 1995ம் ஆண்டு அப்போதைய உள்துறை அமைச்சராக இருந்த டத்தோ மெகாட் ஜூனிட் அறிக்கை விட்டார்.

அப்பொழுதும் அதேப்போன்ற ஆரவாரம். இதன் பிறகு மீண்டும் இம்முறை.

வன்முறை சம்பவங்கள் ஒவ்வொரு சமுதாயத்திலும் இருக்கின்றது என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் உண்மையான காரணத்தை ஏற்றுக்கொள்கின்ற மனப்பக்குவம் முதலில் நமக்கு வர வேண்டும். அறிக்கை விடுபவர்கள் தாங்கள் சார்ந்துள்ள துறைதான் காரணமல்ல என கங்கனம் கட்டிக்கொண்டு, பிரச்னைக்கு தீர்வு காணாமல் 'தற்காத்துப்' பேசுவதிலேயே நேரத்தை செலவழித்துவிடுகின்றனர்.

இந்திய இளைஞர்கள் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பல காரணங்கள் உண்டு. அவை:

- வன்முறை சினிமா
- சிதைந்த குடும்பம்
- மது
- போதை
- வேலை வாய்ப்பின்மை
- போதிய கல்வியின்மை
- சமயக் கல்பியின்மை
- பெற்றோர் அன்பில்லாமை
- திறமையிருந்தும்வெளிப்படுத்த முடியாத நிலைமை

இந்திய இளைஞர்களின் சிலர் குண்டர் கலாச்சாரத்தில் ஈடுபடுவதற்கு வன்முறை தமிழ்சினிமாவும் ஒரு காரணம் என பி.ப.சங்கம் ஆதாரப்பூர்வமாக காரணம் காட்டினால் அது பொய். இது காரணமல்ல. மற்ற படங்களைப் பாருங்கள். அவர்கள் சண்டைபோடவில்லையா என விதண்டாவாதம் செய்யும் விவாதப் பிரியர்கள் அறிக்கை விட ஆரம்பித்துவிடுகின்றனர்.

தோட்டப்புறம், குடியிருப்புப் பகுதிகள் மற்றும் புறம்போக்கு இடங்களில் வசிப்போரின் வாழ்க்கை முறையை உணராதவர்கள் அல்லது தெரிந்து வைத்திருக்காதவர்களே வன்செயல்களுக்கு தமிழ் சினிமா ஒரு காரணமாகாது என, தமிழ் சினிமாவைப் பாதுகாத்துப் பேசி வருகின்றனர்.

"இங்குள்ள ஒரு பையனை அழைத்து உனக்கு அதிகமாக என்ன தெரியும் என்று கேட்டால் அவனுக்கு இரண்டு மட்டும் தெரியும். முன்பு எம்.ஜி.ஆர். இப்பொழுது ரஜினி என்றுதான் சொல்லுவான். அவன் கண்ட இரு குருக்கள் இவர்கள்தான். இது 2.6.95ல் சாமிவேலு சொன்னது.

ஆனால் இன்று இதையே பி.ப.சங்கம் ஆதாரப்பூர்வமாகச் சொன்னால் பலருக்குக் கோபம். வேலை இல்லை, வறுமை நிலை என காரணம் காட்டுகின்றனர்.

நமது வீடுகளில் ஏழ்மை தென்பட்டாலும் பெரும்பாலான வீடுகளில் தமிழ் சினிமாவைக் கண்டு களிக்க வீடியோ அல்லது வி.சி.டி. சாதனத்தை வாங்கி வைத்துள்ளனர். பெற்றோர் வீட்டில் இல்லாத நேரங்களில் கண்காணிப்பு இல்லாமல் விடப்படுப் பிள்ளைகளுக்கு, பள்ளி விட்டு வீ[ட்டுக்கு] வந்த பிறகு உற்ற தோழனாக அமைவது இந்த வீடியோ/வி.சி.டிதான். ஒரே படத்தை ஒரே காட்சியை எத்தனை முறை வேண்டுமானாலும் மீண்டும் மீண்டும் பார்ப்பார்கள். மீண்டும் மீண்டும் பார்க்கும்போதுதான் ஆவல் அதிகரித்து தவறான வழிக்குச் சென்றுவிடுகின்றார்கள்.

பல திரைப்படங்களில் சிறார்களின் மனதைக் கெடுக்[கும்] காட்சிகள் அளவுக்கு அதிகமாகவே இருக்கின்றன.

கெடா மாநிலத்தில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் ஒன்[றாம்] வகுப்பு பயிலும் மாணவி உடற்பயிற்சி நேரத்தில் தமது மாணவனின் கையைப் பிடிப்பதற்கு வெட்கப்பட்டு மறு[த்து] விட்டாளாம்.

எப்படிப்பட்ட சிந்தனை 7 வயதுடைய பிஞ்சு மன[தில்] ஏற்பட்டுள்ளது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்[டும்].

முறையான வளர்ப்பு இல்லாமை - கண்காணிப்பு இல்ல[ாமை] - சரியான ஆன்மீகக் கல்வி இல்லாமை போ[ன்ற] ஆரோக்கியமற்ற சூழல் இல்லாத ஒரு நிலையில் சினிமா வளரும் பல சிறுவர் சிறுமியர்க[ளுக்கு] முன்னுதாரணமாக ஆகிக்கொண்டு வருகிறது.

பல மணி நேரம் பெற்றோர்களின் கண்கா[ணிப்பு] இல்லாத சமயத்தில் சினிமாவின் தா[க்கம்] பலனைத் தந்துவிடுகிறது.

தமிழ் சினிமா பார்க்கும் எல்லா இளைஞ[ர்களும்] கையில் கத்தியையும் கம்ல[ையும்] தூக்கிக்கொண்டு அலைவார்கள் [என்று] சொன்னால் அது மடத்தனம். ஆனால் [தொடர்ந்து] வரும் வன்முறை சினிமாவைப் பார்[க்கும்] ஓர் இளைஞன் பல சமூகப் பிரச்னை[களை] எதிர்நோக்கும் ஓர் இளைஞனாக இரு[ந்தால்] சினிமா பாணியில் தன்னு[டைய] பிரச்னைகளுக்கு தீர்வு காண முட்படமா[ட்டான்] என்று உறுதியாக சொல்ல முடியாது.

ஒருவனை எப்படி ஓட ஓட விரட்டி, கொடுமைப்படுத்தி, அணு அணுவாக சி[த்திரவதை] செய்து, இரத்த வெள்ளத்தில் துடிக்க வ[ைக்கும்] காட்சிைய மிகவும் உணர்ச்சிப்பூ[ர்வமாக] உண்மை நிலையாக காட்டுவதில் சினிமாவை மிஞ்ச முடியாது. நிலைநாட்டும் கதையம்சம் கொண்டிரு[ந்தாலும்] அதற்கும் வன்முறைதான் சரியான வ[ழி என] நியாயம் கற்பிக்கின்றது. சிந்தினால்தான் நீதி கிடைக்கும் தோரணையில் சினிமா படக் க[தைகள்] அமைந்துவிடுவதால், அது இளைய[வர்களின்] மனதினில் இன்னும் பாதகமான ஏற்படுத்திவிடுகிறது.




*அவல நிலையைச் சித்தரிக்கும் பத்திரிகைச் செய்திகள்*

## என்ன செய்யலாம்?

* குறிப்பிட்ட சிலரின் நன்மைக்காக வன்முறை சினிமாக்கள் வன்முறைக்கான காரணமல்ல என்பதை சப்பைக்கட்டு கட்டாமல், வன்முறை சினிமா நமக்கு தேவையில்லை என்பதில் பிடிமானமாக இருக்க வேண்டும். அத்தகைய படங்கள் நம் நாட்டுக்கு வேண்டாம் என திருப்பி அனுப்ப வேண்டும்.

* குழந்தைகளுடன் அதிக நேரத்தை செலவு செய்து அவர்களை சரியான வழிக்கு வழிநடத்தி செல்வது எவ்வளவு முக்கியம் என்பதை பெற்றோர்களுக்கு எடுத்து உணர்த்த வேண்டும்.

* பெற்றோர்களின் கண்காணிப்பு இல்லாமல் சுற்றி தெரியும் குழந்தைகள் அவர்கள் நேரத்தை சரியான முறையில் செலவு செய்வதற்கு பயிற்சிகள் நடத்த வேண்டும்.

* சமயக்கல்வியை முறையாக சொல்லிக் கொடுப்பது. ஆங்காங்கு சமயம் மற்றும் நன்னெறி பாடங்களைக் குழந்தைகள் விரும்பும் வகையில் தொடர்ந்து நடத்த வேண்டும்

* இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கு எப்பொழுதாவது ஒரு முறை கருத்தரங்கு நடத்துவதை விட்டு ஒவ்வொரு பகுதியிலும் செயற்குழுவை அமைத்து தொடர் நடவடிக்கைகளை நடத்த வேண்டும்.

* இத்தகைய நிகழ்ச்சி நடத்துனர்களுக்கு பயிற்சி அளித்து மாதிரி வழிகாட்டிகளை தயார் செய்ய வேண்டும்.

* சமுதாயப் பிரச்னைகள் தொடர்பாக ஆய்வு மேல் ஆய்வு நடத்துவதைக் குறைத்து, நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

* பள்ளிக்கூடங்களில் பாட நேரங்களைத் தவிர்த்து மற்ற நேரங்களில் சமய வகுப்பு நடத்த முடியும் என்பதை இந்து ஆசிரியர்களுக்கு எடுத்துக் கூறி அத்தகைய வகுப்புக்களை நடத்துவதற்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

* பெற்றோர்கள் சம்பாதிக்கும் பணத்தை குழந்தைகளின் மேம்பாட்டிற்கு எப்படி முறையாக செலவழிக்க வேண்டும் என்று சொல்லிக்கொடுக்கப்பட வேண்டும்.

* இன்னும் சில நடவடிக்கைகளுக்கு பார்க்க பக்கம் 5

www.padippakam.com



# இந்திய மாணவர்களைத் மிழ்ப்பட வன்முறைக் காட்சிகள் பெரிதும் பாதிக்கின்றன!

### மலாயாத் தமிழ்ப்பள்ளி ஆசிரியர் தேசிய சங்கத்தின் தலைவர் ஷாகூல் அமிட் கூறுகிறார்.



பதி, *பாட்ஷா*போன்ற படங்களைப் பார்த்து தன்னையும் வர்களைப் போல் நினைத்துக்கொண்டு மாணவர்கள் யல்படுகின்றார்கள். *படையப்பா*படத்தில் ஒரு தலைவன், வன் பின்னே ஒரு கூட்டம். இதுபோன்று வாழ்க்கையை மைத்துக்கொள்ள முற்படுகின்றார்கள்.

ணவர்கள் படத்தில் காட்டப்படும் கருவிகளைக் ாண்டு தங்களின் எதிரிகளைத் தாக்குகிறார்கள். ப்பாக பிளேட் கத்தி, கத்தி, சைக்கிள் சங்கிலி, வாள், கூர்மையான ஆயுதங்களை யோகின்றார்கள்.

யத்தைக் காப்பதாக நினைத்துக்கொண்டு, சுயமாக ானங்களை நிறைவேற்றுவது போன்று மாணவர்கள் வெடுத்து செயல்படுகிறார்கள். பழிக்குப் பழி வாங்கும் ணம் அதிகரித்துள்ளது.

வரை அடிப்பதும், கொலை செய்வதும் சர்வ சாதாரண றாகத் தமிழ்ப்படங்கள் சித்தரிக்கின்றன. இவை க்கையின் நியதி என மாணவர்கள் தப்பாக னத்துக்கொண்டு செயல்படுகின்றனர்.

பாதைய தமிழ்ப்படங்கள் அதிகமான வன்முறைக் காட்சிகளையும், அதிகப்படியான ஆபாசம், ஆடைக்குறைப்பு, விரசமான பேச்சு, கிண்டல் செய்தல் போன்றவற்றை அதிகமாகக் கொண்டுள்ளது. படங்களில் பேசப்படும் வசனங்கள், இரட்டை அர்த்தத்தைக் குறிக்கும் வண்ணம் (குறிப்பாக நகைச்சுவை) என்ற பெயரில் கொச்சையாகவும் பேசப்படுவதை மாணவர்கள் பின்பற்றுகிறார்கள். இதுவும் கலாச்சார அநாகரீகத்தை நோக்கிச் செல்வதாக உள்ளது.

காதலுக்கு தியாகம் செய்வதாக நினைத்துக்கொண்டு ஆறாம் வகுப்பு மாணவி, உயிர்க்கொல்லி மருந்துகளை உட்கொள்ளுதல், காதலன்/காதலியின் பெயரை பிளேட் கத்தியினால் தங்கள் கைகளில் சீவிக்கொள்ளுதல் போன்றவை பள்ளிகளில் நடக்கின்ற உண்மைச் சம்பவங்களாகும். இவை தமிழ்ச்சினிமாவின் தாக்கத்தால் வந்தவையே.

பொதுவாகவே தமிழ்ப்படங்கள் எதிர்மறையான தாக்கத்தையே அளித்து வந்துள்ளன. அவற்றுள்

- புகை பிடித்தல், மதுபானம் அருந்துதல்
- இள வயதில் காதலினால் வீட்டை விட்டு ஓடுதல்
- வீண் சண்டையில் ஈடுபடுதல்
- அறைகுறை ஆடைகளை அணிதல்
- பலிக்குப் பலி என்ற எண்ணம்
- ஜாதிக் கலவரத்தில் ஈடுபடுதல்
- வெடிவைத்தல் (சொந்தமாக செய்வது - இப்பொழுது மாணவர்களிடையே பரவி வருகின்ற மோகம்)
- பெண்களைக் கிண்டல் செய்தல்
- குண்டர் கும்பலுக்குத் தலைவனாக வர ஆசைப்படுதல்
- பெண்களைக் கற்பழித்தல்
- ஒழுக்கமற்ற சொற்களைப் பயன்படுத்துதல்

போன்றவை தமிழ் சினிமாவில் சாதாரணமாகவே காணுகின்ற ஒன்றாக இருக்கிறது. இவையும் இந்திய மாணவர்களை வெகுவாகப் பாதிக்கின்றது.

அண்மையில் வெளிவந்த படங்களில் வன்முறைக் காட்சிகள் அதிகமாக இருந்த படங்கள் : *பாட்சா, படையப்பா, தளபதி, அமரன், அமர்க்களம், காதல் தேசம், சின்ன சின்ன கண்ணிலே* என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

இப்படங்கள் அனைத்தும், வன்முறைக் கலாச்சாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்று நினைக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, மாணவர்களும், அவை ஏற்றுக்கொள்ளப்பட்டவை என நினைத்து வன்முறை கலாச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்.

> காதலுக்கு தியாகம் செய்வதாக நினைத்துக்கொண்டு ஆறாம் வகுப்பு மாணவி, உயிர்க்கொல்லி மருந்துகளை உட்கொள்ளுதல், காதலன்/காதலியின் பெயரை பிளேட் கத்தியினால் தங்கள் கைகளில் சீவிக்கொள்ளுதல் போன்றவை பள்ளிகளில் நடக்கின்ற உண்மைச் சம்பவங்களாகும்.

தற்பொழுதுள்ள படங்கள் நன்னெறிப் பண்புகளை வலியுறுத்துவதில்லை. அடையாத, கிட்டாத ஒன்றை அழித்துவிடும் மனப்பான்மையைத் தூண்டுகின்றன. மேலும் விட்டுக்கொடுத்தல், பரிவு காட்டுதல் போன்ற பண்புகளை உயர்த்திக் காட்டுவது மிகக் குறைவே.

# மிழக வன்முறைக் காட்சிகளால் நமக்கென்ன நன்மைகள்?

### இதயம் ஆசிரியர் துரைராஜ் கேட்கின்றார்.



ப்படங்கள் அனைத்திலும் றை ஆதிக்கம் செலுத்துகிறது ஒட்டுமொத்தமாகக் கூறிவிட து. ஆனால் சில காட்சிகளில் பெற வைக்கப்படுகின்ற றைகளில் பார்க்கிற மகளும் கொடுமைகளும் யாவுக்குத் தேவையில்லை.

மூக சிந்தனையாளனை சமூக திகள், பலவிதமான களை ஏந்திக்கொண்டு பொது ஓட ஓட விரட்டி, வெட்டிக் படுத்துவதும் அல்லது கொலை தும் மிக அழகாகக் ப்படுகிறது. அதைப் பார்த்துக்கொண்டு, மக்கள் வேடிக்கை பார்ப்பது போல் வில் காட்டப்படுகிறது. அப்படியென்றால் ளரில் போலீஸ் இல்லையா? பொது சிந்தனை , சமூக விரோதிகளைப் பிடிக்கும் நெஞ்சுரம் டவர்கள் இல்லையா? இருக்கவிட ார்கள், படத்தயாரிப்பாளர்கள். ளையும் இரத்தக்கசிவுகளையும் காட்டி பெட்டிகளை நிரப்பிவிடலாம் என்ற வியாபார , அவர்களை ஆட்டிப்படைக்கிறது.

றந்த தமிழ்நாடு - வீரம் செறிந்த தமிழ்நாடு ஏட்டளவில்தான் இருக்கிற தமிழ்நாட்டில்தான் படங்கள் எடுத்து மலேசியா போன்ற நாடுகளில் பேசி பணம் தேடுகிறார்கள், திரைப் படத் பாளர்கள்.

"தன்னலம் பேணி, இழிதொழில் புரியோம்... பூரண ஞாலம் பொலிந்த நன்னாடு... தெளிவு பெற்ற மதியினாய் வா... வா... சிறுமை கண்டு பொங்குவாய் வா... வா... வா...ஜாதி நூறு சொல்லுவாய் போ... போ... தருமம் ஒன்றி அற்றிலாய் போ... போ... நீதி நூறு சொல்லுவாய்... காசொன்று நீட்டினால் வணங்குவாய் போ... போ..." என்று பாடிய மகாகவி பாரதிக்கு நூற்றாண்டு விழா கொண்டாடிய தமிழகமே ஜாதிச்சண்டைகளை வன்முறைக் காட்சிகளைக் கொண்டு நிரப்பி, திரைப் படங்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்கிறது.


ஒரு காலக்கட்டத்தில், குதிரை ஏற்றம், மல்யுத்தம், வாள் சண்டை (இப்பொது அது ஒலிம்பிக் பக்கம் போய்விட்டது) போன்றவை வீரத்தையும் தீரத்தையும் காட்டும் காட்சிகளாகப் படங்களில் காட்டினார்கள்.

> வன்செயல் காட்சிகளை மலேசியாவுக்குள் இறக்குமதியாகும் திரைப்படங்களிலிருந்து நீக்குவதற்கு உள்துறை அமைச்சு சட்டம் போட வேண்டும்

ஆனால் இப்போது, திரைப்படக்கதைகளில் விறுவிறுப்பாக்க பிண்டங்கள் வைப்பது, ஒரு கையில் எறிகுண்டுடனும் மறு கையில் துப்பாக்கியுடனும் திருக்காட்சி காட்டுவது, மருத்துவ மனைகளில் வெடிகுண்டு வைப்பது, போலீஸ் வாகனம் மீது குண்டுவீசுவது, ஒரு பாவமும் அறியாத குடும்பத்தையே பளபளக்கும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் வெட்டிக்கொலை செய்வது, இளம் பெண்களை ஓட ஓட விரட்டிக் கற்பழிப்பது, கற்பழித்த பிறகு கொலை செய்வது... இப்படிப்பட்ட வன்செயல் காட்சிகளை மலேசியாவுக்குள் இறக்குமதியாகும் திரைப்படங்களிலிருந்து நீக்குவதற்கு அரசாங்கம் குறிப்பாக உள்துறை அமைச்சு சட்டம் போட வேண்டும். இதன் தொடர்பில் திரைப்படத் தணிக்கை வாரியத்துக்கு அரசாங்கம் கண்டிப்பாக வழிகாட்டல்களை நிர்ணயம் செய்து, கட்டளையாக நிறைவேற்ற வேண்டும்.

நல்ல படிப்பினையான நெஞ்சைத் தொடும் கதை அம்சங்களுக்கு ஊடே, இத்தகைய வன்முறை கலாச்சாரத்தையும் புகுத்த வேண்டிய அவசியம் நமக்குத் தேவையில்லை. ஒரு குடம் பாலுக்குள் ஒரு துளி விஷத்தைச் சேர்க்க வேண்டாம்.

மயிலே... மயிலே இறகு போடு என்று மணிரத்தினங்களிடமும் ரஜினிகளிடமும், அர்ஜுன்-களிடமும், சரத்குமார்களிடமும் விஜயகாந்துகளிடமும் கெஞ்சிக்கொண்டிருப்பதில் பலன் இல்லை.



www.padippakam.com






## கேமரன் மலை இந்திய விவசாயிகள் பிரச்னை

# எங்கள் காய்கறிகளை வாங்குங்கள்! விவசாயம் செய்ய நிதியுதவி செய்யுங்கள்!

கேமரன் மலை முன்பு போன்று இல்லை. காட்டு வளமும் இறைவன் கொடுத்த இயக்கை செழிப்பும் நிறைந்த கேமரன் மலை இப்பொழுது மேம்பாட்டு திட்டத்திற்காக பல வழிகளில் சிதைக்கப்பட்டு வருகின்றது. வானளாவிய கட்டிடங்களுக்கும் விடுதிகளுக்கும் வழி விடுவதற்காக இந்தக் காடுகளைத் தியாகம் செய்து வருகின்றனர்.

விளைவு, பெருத்த மழை ஏற்பட்டால் திடீர் வெள்ளம், வெள்ளத்தைத் தொடர்ந்து நிலச்சரிவு. இவ்வாறான நிலையில் கேமரன் மலையைச் சேர்ந்த இந்திய விவசாயிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.



கேமரன் மலை விவசாய சங்க தலைவர் விஸ்வநாதன் விவசாய அமைச்சரிடம் மகஜர் வழங்குகின்றார்

இவ்வாண்டு ஜனவரியில் ஏற்பட்ட நிலச்சரிவில் இந்த விவசாயிகளின் காய்கறி மற்றும் பூந்தோட்டங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாயின.

இதற்கிடையே கேமரன் மலை காய்கறிகளின் விலைகள் கடுமையான வீழ்ச்சியடைந்த காரணத்தால் கேமரன் மலை விவசாயிகள் வருமானத்தை இழந்ததோடு அதிக அளவிலும் பாதிக்கப் பட்டனர்.

### வேலை செய்ய யாரும் இல்லை

### விவசாய அமைச்சருக்கு மகஜர்

கேமரன் மலை இந்திய விவசாயிகள் சங்கத்தின் தலைவர் திரு விஸ்வநாதன் கூறுகையில் காய்கறிகளின் விலைகள் திடீரென்று இறங்குவதற்கு நாங்கள் உற்பத்தி செய்யும் அதே காய்கறிகள் இந்தோனீசியா, சீனா மற்றும் தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்வதே காரணம் என்று குறிப்பிட்டிருந்தார்.

தங்களுடைய பிரச்னைகளுக்கு வழிகாணும் வகையில் கேமரன் மலை இந்திய விவசாயிகள் சங்கம் தங்களுடைய பிரச்னைகள் தொடர்பாக கடந்த 5.10.2000ல் விவசாய அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பினர்.

அந்த மகஜரில் அவர்கள் தங்களுடைய பிரச்னைகளையும் அதைக் களைவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துரைத்தனர்.

### காய்கறி இறக்குமதியை கட்டுப்படுத்துங்கள்

முட்டைக்கோசு மற்றும் தக்காளி போன்ற காய்கறிகள் கேமரன் மலையில் விளைச்சல் செய்வதால், இந்தோனீசியாவிலிருந்து முட்டைக்கோசு இறக்குமதி செய்வதையும், தாய்லாந்திலிருந்து தக்காளி இறக்குமதி செய்வதையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அச்சங்கத்தின் செயலாளர் சாம்பசிவம் கூறினார்.

### தரமான விதைகள்

விவசாய அமைச்சு நல்ல விளைச்சலைக் கருத்தில் கொண்டு தரமான விதைகளை விற்க வேண்டும். விற்கப்படும் விதைகளுக்கு அவற்றில் காலாவதியாகும் தேதியையும் குறிப்பிட வேண்டும் எனவும் இச்சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

### உரங்களின் விலை

விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப்படும் உரம் கடந்த 10 ஆண்டுகளில் 130% உயர்வு கண்டுள்ளது. உரங்களின் விலை இன்னும் ஏறிக்கொண்டே போகாமல் இருக்க அவற்றை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

இவற்றின் விலைகள் உயரும் வேலையில் காய்கறிகளை உற்பத்தி செய்யும் செலவினங்களும் அதிகரிக்கும். இது தொடர்ந்து காய்கறிகளின் விலையை அதிகரிக்கச் செய்து பயனீட்டாளர்களின் சுமையை அதிகரிக்கும்.

### நில வரி

விவசாயம் செய்யப்படும் நிலத்திற்கு விதிக்கப்படும் நில வரி ஆரம்பத்தில் ஒரு ஏக்கருக்கு ம.வெ. 20 ஆக இருந்தது.

இப்பொழுது அதே ஒரு ஏக்கருக்கு விதிக்கப்படும் தொகை மவெ. 300 ஆகும். இதனை 1 ஏக்கருக்கு மவெ. 50 கட்டணம் என்று குறைத்தால் விவசாயிகளின் சுமை குறையும் என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### தற்காலிக நில லைசன்ஸ்

கேமரன் மலையில் அதிக காலத்திற்கு விவசாயம் செய்து வருபவர்களுக்கும் கூட இன்னும் நில லைசன் வழங்கப் படவில்லை. நீண்ட கால கட்டத்திற்கு விவசாயம் செய்து வருபவர்களுக்கு இந்த நில லைசன்ஸ் கிடைக்க விவசாய அமைச்சு ஆவன செய்ய வேண்டும்.

### நிதி உதவி

பெரும்பாலும் ஒவ்வொரு வருடமும் விவசாய நிலங்கள் வெள்ளத்தாலும் நிலச்சரிவாலும் பாதிக்கப்படுவதால், அதிக பாதிப்புக்கு உள்ளான இந்திய விவசாயிகளுக்கு உதவுவதற்கென நிதி உதவியையும் அமைச்சு ஏற்படுத்த வேண்டும்.

### தொழிலாளர் பற்றாக்குறை

கேமரன் மலையில் ஒவ்வொரு வருடமும் விவசாய நிலங்களில் வேலை செய்வதற்கென உள்ள தொழிலாளர்கள் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது.

தற்போதைய நிலையில் கேமரன் மலையில் விவசாய நிலங்களில் வேலை செய்ய சுமார் 500 தொழிலாளர்கள் தேவைப் படுகின்றனர்.

இந்தத் தொழிலாளர் பற்றாக்குறையைத் தீர்க்க அமைச்சு விரைவு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேமரன் மலை விவசாய சங்கம் கேட்டு கொண்டது.



வெள்ளத்தாலும் நிலச்சரிவினாலும் சேதமான காய்கறிக்கொல்லைகள்

படிப்பகம்

# கூடுதல் பாகங்களால் கூடுதல் இலாபம் பெறுகிறார்கள்

## இயோன் கூடுதல் பாகங்கள் தொடர்பான சட்டத்தை அமுலாக்கம் செய்ய வேண்டும்!

**ஒவ்வொரு புதிய மலேசியக் கார் வெளியாகும்பொழுதும் காருக்குப் பொருத்தப்படும் கூடுதல் பாகங்கள் தொடர்பான பிரச்னை எழுந்துகொண்டுதான் இருக்கிறது.**

**காரில் கூடுதல் பாகத்தை இணைக்க விரும்பாத பயனீட்டாளர்களுக்கு முதலில் கார்களை விற்பதில் தயக்கம் காட்டும் கார் விற்பனையாளர்களைக் கண்டித்து 1996ம் ஆண்டில் அனைத்துலக வாணிக தொழிற்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ ரபீடா அசீஸ் அறிக்கை விட்டிருந்தார்.**

**இவ்வாறு நடந்துகொள்ளும் கார் விற்பனையாளர்களின் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதை தாம் உறுதி செய்யப் போவதாகவும், தவ்றிழைக்கும் கார் விற்பனையாளர்களின் லைசென்ஸ்களை ரத்து செய்யப்போவதாகவும் அவர் அறிவித்திருந்தார்.**

**ஆனால் நான்கு வருடங்களுக்குப் பிறகு இதே பிரச்னை இன்னும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே இப்பிரச்னை தொடர்பாக உண்மையிலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று பி.ப.சங்கம் கேள்வி எழுப்ப விரும்புகிறது.**




புரோட்டோன் கார்களை வாங்குபவர்கள் ரேடியா, குளிர் சாதன வசதி, ஒரே பூட்டு இணைப்பு, தானியங்கிக் கதவுகள், அலார இணைப்பு, துரு எதிர்ப்பு இணைப்பு இவற்றைத் தவிர்த்து காருக்குத் தேவையான மற்ற கூடுதல் பாகங்கள் இணைக்கப்படாமல் கார்களை வாங்கலாம் என்று இயோன் நிறுவனம் அறிவித்திருந்தது.

ஆனால் இவ்வாறான சலுகைகள் வழங்கப் படுவதில்லை என்று பினாங்கு பயனீட்டாளர் சங்கத்திற்கு வந்த புகார்களிலிருந்து தெரிய வந்திருக்கிறது.

உள்நாட்டு வாணிப பயனீட்டாளர் விவகார அமைச்சர் டான் ஸ்ரீ முயிடின் யாசின் பயனீட்டாளர்கள் கூடுதல் பாகங்களை வாங்க வேண்டுமா வேண்டாமா என்பதை முடிவு செய்வதில் உரிமை உண்டு என்று அறிவித்திருந்தார்.

இதற்குத் தலைமை இயக்குனர் டத்தோ அஸ்மி அப்துல் வாஹாப் பயனீட்டாளர்கள் கூடுதல் பாகங்கள் இல்லாமல் கார்களை வாங்கலாம் என்று அறிவித்திருந்தார். இது தொடர்பாக இயோன் தன்னுடைய கிளைகளுக்கும் ஏஜண்டுகளுக்கும் அறிக்கைகளை அனுப்பிவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் தற்பொழுது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புரோட்டோன் வாஜாவை வாங்கும் பயனீட்டாளர்களின் பிரச்னைகளே வேறு. புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புரோட்டோன் வாஜா கூடுதல் பாகங்களோடு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அதனால் புரோட்டோன் வாஜாவை இந்தக் கூடுதல் பாகங்கள் இல்லாமல் வாங்குவது என்பது முடியாத காரியம் என்று ஒரு புரோட்டோன் விற்பனையாளர் தன்னிடம் கூறியதாக ஒரு பயனீட்டாளர் பி.ப.சங்கத்திடம் அறிவித்துள்ளார்.

### கசக்கும் உண்மைகள்

*** கூடுதல் பாகங்களால் கூடுதல் இலாபம் பெறுகிறார்கள்!**

*** புரோட்டோன் கார்களை கூடுதல் பாகங்கள் இல்லாமல் வாங்கலாம் என்பார்கள்!**

*** அமைச்சின் உத்தரவு வேறு, இயோன் நிறுவனத்தின் போக்கு வேறு!**

*** கூடுதல் பாகங்கள் வேண்டாம் என்றால் கார் இல்லை!**

*** தேவையில்லாமல் கூடுதல் பாகங்களைப் பொருத்துவதால் பயனீட்டாளர்களின் பணம் பறிக்கப்படுகிறது!**

அதோடு அதே விற்பனையாளர் குறிப்பிட்ட பாகங்களோடு மட்டும்தான் தாங்கள் காரை விற்க வேண்டும் என்று இயோன் தங்களுக்கு எந்த வித உத்தரவையும் பிறப்பிக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதனால் விற்பனையாளர் காரை கூடுதல் பாகங்களோடு விற்பாராம்.

கார் வாங்குபவர் இது தொடர்பாக இயோன் நிறுவனத்திற்கு கடிதம் எழுதி, அவரும் அப்படித்தான் வாங்க வேண்டும் என்றார். ஆதலால் கூடுதல் பாகங்களோடு மட்டும்தான் காரை வாங்க வேண்டும்.

இந்தக் கூடுதல் பாகங்கள் ஒரு புதிய பிரச்னை அல்ல. 1988ல் பினாங்கைச் சேர்ந்த ஒரு பயனீட்டாளர் 1.5GL புரோட்டோன் வீராவை வாங்கும்பொழுது அவர் மவெ.5,788 பெருமானமுள்ள கூடுதல் பாகங்களை வாங்கித்தான் ஆக வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டார்.

இறுதியில் வேறு வழியில்லாமல் மலேசியக் காருக்குப் பதிலாக ஜப்பானியக் காரை அவர் வாங்கினார்.

இந்தக் காருக்கான கூடுதல் பாகங்கள் தொடர்பான பிரச்னைகளை இயோன் நினைத்தால் விரைவில் தீர்த்துவிடலாம். அப்படி இயோன் இது தொடர்பான சுற்றறிக்கையைப் விற்பனையாளர்களுக்கு அனுப்பியிருந்தால் அவர்கள் அதன்படி நடந்துகொள்கிறார்களா இல்லையா என்பதனை கண்காணிக்க வேண்டும்.

இயோன் உண்மையிலேயே இந்த விஷயத்தில் நேர்மையாக நடந்துகொள்ள நினைத்தால் கார்களை கூடுதல் பாகங்கள் இல்லாமலும் வாங்கலாம் என்று தெளிவுபடுத்தும் அறிக்கைகளையும், போஸ்டர்களையும் இயோன் விற்பனைக் கம்பெனிகளில், பார்வையில் படும்படி ஒட்டி வைக்க வேண்டும்.

இப்படிச் செய்தால் கார் வாங்கும் பயனீட்டாளர்களின் பிரச்னைகளைக் குறைக்கலாமே.

www.padippakam.com






# மூட்டு வாதம்


மூட்டு வதாம் அல்லது ருமதைய்ட் ஆர்த்தரைட்டிஸ் (Rheumatoid arthritis) மெது மெதுவாக ஏற்படும் நோயாகும். இது குறிப்பாக மூட்டுக்களை வீங்க வைத்து வலி உள்ள- தாக்கும். உடனடியாக சிகிச்சை- அளிக்கப்படாவிடில் அது அங்க செயலிழப்பை ஏற்படுத்தலாம்.

தசை நார், ஜவ்வு, குருத்தெலும்பு போன்ற- வற்றில் வீக்கம் ஏற்படுவதால், மூட்டுக்களின் இயக்கம் மிகவும் வலியை ஏற்படுத்திவிடும். இது கவனிக்கப்படாமல் போகும் போது, அப்பகுதி வலி காரணத்தால் அசைக்காமல் வைத்திருந்தால், மூட்டுக்கள் இறுகிவிடும். இத்தகைய நிலையில் அங்க செயலிழப்பு ஏற்படுகிறது.

ஆரம்பத்தில் இந்நோய் கை விரல் மூட்டுக்களை தாக்கும். பிறகு மெல்ல மெல்ல கைகளில் உள்ள சிறு சிறு தசைகளை இறுக்கமாக்கும். இதனைத் தொடர்ந்து விரல்கள் குறுகளாக வளைந்து கொள்ளும். இப்படியே மெதுவாக மணிக்கட்டு, கணுக்கால், முழங்கை, கால்முட்டி, தோள்பட்டை, இடுப்பு தாடை இப்படி ஒவ்வொரு மூட்டாக நோய் தாக்கும். இந்நோய் நாள் படபட முதுகுத் தண்டையும் தாக்கும் நிலையை ஏற்படுத்தும்.

## ஐஸ் தண்ணீர் அறவே வேண்டாம்

இந்நோய்க்கான காரணம் இரத்தத்தில் சேரும் கழிவுகளாகும். இந்த நவீன காலத்தில் மனிதர்களின் முக்கிய உணவாக இருக்கும் இறைச்சி, உப்பு, சீனி, பதனிடப்பட்ட பொருட்கள் போன்றவை அதிகமான அமில நச்சுக்கள் மற்றும் வாய்வை உடலில் சேர்த்து விடுகின்றன. உடலில் சேரும் இந்த நச்சுக்கள் மற்ற முறையான உணவுகளின் வழி உடலை விட்டு வெளியேறாத நிலையில் அவை சிறுக சிறுக நம் உடலில் இருக்கும் மூட்டுக்களில் படிய ஆரம்பிக்கின்றது. இதுதான் நாளடைவில் மூட்டு வாதமாக உருவெடுக்கிறது.



இந்த மூட்டு வாதத்திற்கு பரவலாக கிடைக்கும் மூன்று மூலிகைகளை நாம் பயன்படுத்தலாம். முடக்கத்தான் இலை ஒரு கைப்பிடி அளவு எடுத்து இலேசான எண்ணெயில் வதக்கி மதிய உணவின் போது தினமும் சேர்த்துக் கொள்ளலாம்.

**● மூட்டு வாதம் உள்ளவர்கள் புளிப்பு பதார்த்தங்களைத் தயிர் உட்பட அனைத்தையும் தவிர்க்க வேண்டும். உணவில் உப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும். வாய்வு நிறைந்த பருப்பு வகைகள், பொறித்த உணவு மற்றும் மலச்சிக்கலை ஏற்படுத்தும் அனைத்து உணவுகளையும் அடியோடு தவிர்க்க வேண்டும். ●**

வாதமடக்கி எனப்படும் வாதத்தைக் குணப் படுத்துவதற்குச் சிறந்த மூலிகையான இதுவும் மூட்டு வாதத்திற்கு சிறந்த மருந்து. இந்த இலைகளில் 5 அல்லது 6 இலைகளை ஒவ்வொரு நாளும் உணவு சமைக்கும் போது அதனோடு சேர்த்து சமைத்து சாப்பிட்டு வரலாம்.

நொச்சி இலையைக் கொதிக்க வைத்து குடிநீராக அருந்தி வரலாம். இந்நோய் உள்ளவர்கள் புளிப்பு பதார்த்தங்களைத் தயிர் உட்பட அனைத்தையும் தவிர்க்க வேண்டும். உணவில் உப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும். வாய்வு நிறைந்த பருப்பு வகைகள், பொறித்த உணவு மற்றும் மலச்சிக்கலை ஏற்படுத்தும் அனைத்து உணவுகளையும் அடியோடு தவிர்க்க வேண்டும். பூண்டும், இஞ்சியும் இந்நோயாளிகளுக்கு மிகவும் நன்மை பயக்கும். ஒவ்வொரு நாளும் உணவோடு ஐந்து பல் பூண்டு , நாள் ஒன்றுக்கு இரு வேளை கொடுக்க வேண்டும். அப்படிப் பூண்டை பச்சையாக சாப்பிட முடியவில்லை என்றால், இலேசாக நெய்யில் அதனை வறுத்து உண்ணக் கொடுக்கலாம்.

கசப்பு சுவையுள்ள காய்கறிகளான பாகற்காய், முருங்கைக்காய், வேப்பம்பூ இந்நோயாளிகளுக்கு மிகவும் சிறந்த உணவாகும். சோற்றைத் தவிர்ப்பது நல்லது.

மூட்டுக்களில் ஏற்பட்டிருக்கும் வீக்கம் காரணத்தினால், நோயாளிகள் அதிகம் செயல்பட வேண்டாம் என்று கூறப்படுவார்கள். ஆயினும் மூட்டுக்களை அசைக்கமால் வைத்திருக்கக்கூடாது. இது நிரந்தர செயலிழைப்பை ஏற்படுத்திவிடக்கூடும். ஆகையால் மென்மையான உடற்பயிற்சிகளை இவர்கள் செய்ய வேண்டும்.

குளிர், காற்று போன்றவை தாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குளிர் நீர் குளியலையும் தவிர்க்க வேண்டும். ஐஸ் தண்ணீர் அறவே வேண்டாம். இரவு உணவுக்கும் தூங்கும் நேரத்திற்கும் இடையே அதிக இடைவெளி இருக்க வேண்டும்.

நன்றி : கோ.பாசுகரன்

# பணத்தை செலவழிக்காமல் பரிசு கொடுக்கலாம்

பணத்தை செலவழிக்காமல் பரிசு கொடுப்பது என்றால் முடிகின்ற காரியமா? ஆனால் முடியும். இம்மாதிரியான பரிசுகளை வழங்கு- வதால் ஒருவருடைய உள்ளத்திலும் உணர்விலும் நீங்கள் நிரந்தர இடத்தைப் பிடிப்பதோடு மட்டுமல்லாமல் நல்ல பிள்ளை என்ற பெயரையும் எடுக்கலாம்.

அதற்கான வழிகள் இதோ:-

1. காது கொடுத்து கேளுங்கள். அடுத்தவர்கள் உங்களிடம் ஆர்வமாகப் பேசும்பொழுது உன்னிப்பாக அக்கறையாகக் கேளுங்கள். அவர் பேசும்பொழுது இடை மறிக்காதீர்கள். ஒருவர் பேசும்பொழுது பகல் கனவு காணாதீர்கள். முழுமையாக உண்மையாகக் கேளுங்கள்.

2. தட்டிக்கொடுப்பதையும் அரவணைத்துக் கொள்வதையும் மிகவும் நேர்மையாக செய்யுங்கள். உங்களுடைய உண்மையான அன்பினால் அவர்களை மூழ்கடித்துவிடுங்கள்.

3. கார்ட்டூன், நகைச்சுவை, சிந்தனையைத் தூண்டும் கதைகள் என்று எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

4. குறிப்பு எழுத மறக்காதீர்கள். "நீங்கள் செய்த உதவிக்கு நன்றி", "உங்கள் சேவையை உயிருள்ள வரை மறக்க மாட்டோம்" என்று எழுத்துப்பூர்வமான நன்றிகள் உங்களை இன்னொருவருடைய நெஞ்சில் நிலை நிறுத்தச் செய்து, அன்பைப் பெருக்கும்.

5. வாழ்த்துங்கள். "நல்ல காரியம் செய்தீர்கள்" "அருமையான உணவு""சிறப்பான ஏற்பாடு" என்று ஒருவர் ஆற்றிய காரியத்தை நன்றியுணர்ச்சியோடு புகழுங்கள். உங்கள் மேல் அவருக்கு ஒரு நம்பிக்கை உணர்ச்சி ஏற்படும். உங்களுக்காக காரியம் ஆற்றத் தயங்கமாட்டார்.

6. ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு நல்ல காரியத்தைச் செய்துகொண்டிருங்கள்.

7. சில நேரங்களில் நம்மை எவரும் தொந்தரவு செய்யாமல் தனிமையில் இருக்க விரும்புவோம். மற்றவர்களுக்கும் அப்படித்தான். ஒருவர் தனிமையாக இருக்க விரும்பும் தருணத்தில் அவரிடம் தொணதொணக்காமல் தொந்தரவு செய்யாமல் விட்டுவிடுவதுதான் நாம் அவருக்கு அளிக்கும் பரிசு.

8. "நன்றி" "மன்னித்துவிடுங்கள்" என்ற வார்த்தைகளை உபயோகிப்பது சிரமமில்லையே. இந்த சிறு வார்த்தைகளை உபயோகிப்பதனால் உங்களை அறியாமலேயே பெருத்த இலாபத்தைக் காணுவீர்கள்.



www.padippakam.com





எஸ். முனுசாமி

# நச்சுப் புகையிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்

## செலாமா மக்கள் கண்ணீர் வேண்டுகோள்



எஸ். நடராஜன்



தொழிற்சாலையின் கழிவுப் பொருட்களால் சேதமடைந்த முனுசாமியின் வீடு

ாணயங்கள் கருப்பாகி கரை படிகின்றன. தகர உரைகள் ஓட்டையாகி தண்ணீர் உருண்டோடுகிறது, ார்களின் மேல் பாகம் சொறி ஏற்பட்டது போல டைத்துக்கொண்டிருக்கிறது, வெண்கல மற்றும் லுமினியப் பொருட்களும் பாத்திரங்களும் அடுப்புக்கரி ர்ணத்தில் அசர வைக்கின்றன. செடிகளும் மரங்களும் ால்நடைகளும் செத்து மடிகின்றன.

டித்துவிட்டு இது ஏதோ சிறுகதையாக இருக்குமோ என்று ண்ணிவிடாதீர்கள்.

பராக் மாநிலத்தின் செலாமா என்ற ஊரில் இயங்கி வரும் ப்பர் தொழிற்சாலையினால் அங்குள்ள மக்கள் திர்நோக்கிவரும் அவல நிலைதான் இவை.

ந்த தொழிற்சாலை இயங்க ஆரம்பித்த 1989ம் ,ண்டிலிருந்தே இந்த தூய்மைக்கேட்டு பிரச்னையும் ,ரம்பித்துவிட்டது. அமைதியாக இருந்த அந்த ஊரில் ந்த ஹீப் ஹெங் ரப்பர் தொழிற்சாலை இங்கே சிக்கின்ற 5000 மக்களுக்கு உபத்திரவமாக லதரப்பட்ட பிரச்னைகளை ஏற்படுத்துகின்ற தாழிற்சாலையாக அமைந்து வருகின்றது.

நாடர்ச்சியான ஆரோக்கிய சீர்கேடுகள் இங்கு வசிக்கும் கைளிடையே பெருகி வருகிறது.

ங்கு வசிக்கும் 5000 குடியிருப்புவாசிகளில் ஏறக்குறைய ) பேர் இந்தியர்களாக இருக்கின்றனர்.

வர்களில் ஒருவர்தான் பி.வள்ளி என்ற குடும்ப மாது.

ந்த ரப்பர் தொழிற்சாலையில் பல ஆண்டு காலமாக லை செய்து வந்த இவர் தனக்கு ஏற்பட்டிருக்கிற ஸ்துமா நோயினால் கடந்த ஆண்டு ஆகஸ்டு தத்திலிருந்து வேலையை விட்டு நின்றுவிட்டார்.

திருமதி வள்ளிக்கு ஏற்பட்டுள்ள ஆஸ்துமா அவரது குடும்பத்தைக் கடுமையாக பாதித்துள்ளது. மனைவிக்கு ஏற்பட்டிருக்கும் நோயினால் அவரது கணவர் எஸ். நடராஜனும் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்.

இந்தத் தொழிற்சாலை தூய்மைக்கேட்டு பிரச்னையால் நடராஜனின் குழந்தைகளும் உடல் உபாதைகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இங்கு வசிக்கும் மக்களுக்கு செலாமாவில் இருக்கும்போது ஏற்படுகின்ற நோய், செலாமாவைவிட்டு இரண்டு தினங்களுக்கு வேறு இடங்களுக்கு சென்றால் ஏற்படுவதில்லையாம். இது முற்றிலும் உண்மை என அனைவரும் உறுதி கூறுகின்றனர்.

நடராஜன் மாதமொன்றிற்கு ஏறக்குறைய 100லிருந்து 150 வெள்ளியை மருத்துவ சிகிச்சைக்காகவே செலவு செய்து வருகின்றார்.

இதே போன்று பிறந்ததிலிருந்து இங்கேயே வாழ்ந்து வரும் 39 வயதுடைய எஸ். முனுசாமியும், மற்றவர்களைப் போலவே சுகாதாரப் பிரச்னையை எதிர்நோக்கி வருகின்றார். அதோடு இந்தப் புகையினால் அவருக்கு ஏற்பட்ட சொத்து இழப்புக்கள் ஏராளம்.

ரப்பர் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் இரசாயனக் கழிவுப் பொருட்கள் மற்றும் புகையினால் குடியிருக்கும் வீடு பாதிக்கப்பட்டதாகக் கூறும் முனுசாமி அதற்காக இதுநாள் வரைக்கும் ஏறக்குறைய 30,000 வெள்ளி வரை செலவு செய்திருப்பதாகவும் கூறினார்.

முனுசாமி தொலைக்காட்சிக்காக பயன்படுத்தும் "ஏரியல் கம்பி" கூட இந்த நச்சுப் புகைக்குப் பலியாகின்றது. இதுவரை அவர் 5 ஏரியல் கம்பிகளை மாற்றியிருக்கின்றார்.

அதோடு ஜன்னல் கண்ணாடிகளும் துருப்பிடித்து உடைந்துவிடுவதாக கூறும் முனுசாமி, தன்னுடைய வீட்டின் கூரையில் இருக்கும், தகரமும், தகரம் விழாமலிருக்க அதன் மீது அடிக்கப்படும் ஆணியும் தானாகவே விழுந்துவிடுவதாகக் கூறினார்.

இந்தத் தொழிற்சாலையின் தூய்மைக்கேட்டால், குழந்தைகளிடையே மூச்சுத்திணறல், தோல் அரிப்பு, இருமல், தொண்டை வலி, கண் எரிச்சல் மற்றும் தலைவலி போன்றவை ஏற்படுவதாக செலாமா குடியிருப்புவாசிகள் குறைபட்டுக் கொண்டுள்ளனர்.

மேலும் அதே தூய்மைக்கேட்டால் மின்னியல் பொருட்களான தொலைக்காட்சி, ஐஸ்பெட்டி, ரேடியோ, செம்பினால் வடிவமைக்கப்பட்ட பொருட்கள் போன்றவைகள் பாதிக்கப்பட்டுவிட்டதாக அங்கு வசிப்போர் கூறினர்.

"சில்லறைக் காசுகள் கருப்பாகின்றன. முறுக்கு சுடும் அச்சு கருப்பாக மாறிவிடுகிறது" என்கின்றார் முனுசாமி.

"என்னுடைய காருக்குப் புதிய சாயம் பூசி சிறிது காலம்தான் ஆகிறது. ஆனால் இந்த ரப்பர் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் புகையினால் கார் சொறி பிடித்ததுபோல் காட்சி தருகிறது" என்று முனுசாமி தன்னுடைய வேதனையை வெளியிட்டார்.

இங்கு குடியிருப்பவர்கள் நிம்மதியாக தொலைக் காட்சி பார்க்க முடிவதில்லை. வானொலி செவிமடுக்கமுடிவதில்லை. எந்தப் பொருள் எப்பொழுது கருப்பாகி இன்னொரு பொருளை வாங்க வேண்டிய நிலை வருமோ என்ற மன உளைச்சலிலேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் செலாமா மக்கள் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருந்துவிடவில்லை. அவர்களுடைய பிரச்னை தொடர்பாக சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினருக்கும் புகார் கடிதம் அனுப்பி விட்டார்கள். பிரச்னை தொடர்பாக 1991ம் ஆண்டிலேயே புகார் செய்யப்பட்டுவிட்டது. ஆனால் 9 வருடங்கள் கடந்தும் யாரும் அவர்களுடைய புகாருக்குச் செவி சாய்ப்பதாகத் தெரியவில்லை.

வேறு வழியில்லாமல் இப்பொழுது பினாங்கு பயனீட்டாளர் சங்கத்தின் உதவியை நாடி வந்துள்ளனர். பி.ப.சங்கம் இவர்களுடைய பிரச்னையைக் களைவதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்ய முன்வந்துள்ளது.



புகையை சுவாசித்தேன்! ஆஸ்துமாவால் அவஸ்தைப் படுகிறேன்!

- திருமதி வள்ளி

படிப்பகம்

www.padippakam.com






பினாங்கு பயனீட்டாளர் சங்கம்
228, Jalan Macalister, 10400 Pulau Pinang.
Tel : 04-2293511 Fax : 04-2298106

## தண்ணீர் குழாயைப் பொருத்த கட்டணம் விதிக்கக்கூடாது

**லிம் புன் நு**
**மிரி, சரவாக்**

**புகார் :** கடந்த அக்டோபர் 1997ல் நான் சரவாக் மிரியில் உள்ள டேசா பூஜூட்டில் வீடு ஒன்றை வாங்க பதிவு செய்திருந்தேன். அதற்கான விற்பனை மற்றும் வாங்குதல் ஒப்பந்தத்தில் நவம்பர் 1997ல் கையெழுத்திட்டிருந்தேன்.

வீடு கட்டி முடிக்கப்பட்டு ஜனவரி 1999ல் எனக்குக் கொடுக்கப்பட்டது. வீட்டில் குடி புகுவதற்கு முன்பதாக நான் இரு கட்டணங்களைச் செலுத்த வேண்டும் என்று வீட்டு மேம்பாட்டாளர் குறிப்பிட்டிருந்தார். அவை வருமாறு:-

1) கே.டபல்யூ.எம். (KWM)க்கான இணைப்பு செலவு (மவெ. 130)
2) பெரிய குழாயிலிருந்து வீட்டிலுள்ள சிறு குழாய்களுக்கு இணைக்கும் செலவு (மவெ. 416.64)

டேசா பூஜூட்டில் வசிக்கும் இதர குடியிருப்புவாசிகளிடம் இது தொடர்பாக வினவியபொழுது எல்லோரும் இந்தக் கட்டணத்தை செலுத்தியிருப்பதாக எங்களுக்கு அறிவித்தனர். ஆனால் இதற்காக நான் பணம் செலுத்தித்தான் ஆக வேண்டுமா என்று எனக்குத் தெரியவில்லை.

**நடவடிக்கை : இப்பிரச்னை கடந்த அக்டோபர் 1999ல் பி.ப.சங்கத்தின் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த வீட்டுத் திட்டத்தின் மேம்பாட்டாளரான நாயிம் சென்டேரா நிறுவனத்திற்குக் கடந்த பிப்ரவரி 2000ல் கடிதம் எழுதிய பி.ப.சங்கம், ஏன் புகார்தாரர் பெரிய குழாயிலிருந்து வீட்டுக்கு இணைப்பு கொடுக்க கட்டணம் செலுத்த வேண்டும் என்று கேள்வி எழுப்பியது.**

**விற்பனை மற்றும் வாங்குதல் ஒப்பந்தத்தின்படி, வீடு வாங்குபவர்கள் தண்ணீர் மற்றும் மின்சார மீட்டர் மற்றும் தொலைபேசி சேவைக்கான முன் பணத்தை மட்டுமே செலுத்த வேண்டும். தண்ணீர் குழாய் பொருத்துவதற்காக வீடு வாங்குபவர்கள் பணம் செலுத்தத் தேவையில்லை.**

**இதனால் சம்பந்தப்பட்ட மேம்பாட்டாளர் புகார்தாரருக்கு மவெ. 416.64ஐ திருப்பிக் கொடுத்துவிட்டார். இதே தொகையைச் செலுத்திய இதர டேசா பூஜூட் குடியிருப்புவாசிகளுக்கு அவர்கள் செலுத்திய தொகை திருப்பிக்கொடுக்கப்பட்டதா என்பதுதான் தெரியவில்லை.**

## இரும்புக் கதவுக்கான பணத்தைத் திருப்பக் கொடுங்கள்

**ஷேட் ஜோஹாரி பின் ஷேட் ஆமாட்**
**ரேலாவ், பினாங்கு**

**புகார் :** நான், கடந்த ஏப்ரல் 1995ல் பினாங்கு, ரேலாவ்வில் அடுக்குமாடி வீடு ஒன்றை வாங்கினேன். ஜனவரி 1998ல்தான் அந்த அடுக்குமாடி வீடு கட்டி முடிக்கப்பட்டு எனக்குக் கொடுக்கப்பட்டது. அப்பொழுது வீட்டை செப்பனிட்டதற்கான தொகை மவெ. 500ஐ என்னிடம் கேட்டார்கள். இதில் நுழைவாயில் இரும்புக் கதவு பொருத்திய செலவும் அடங்கும்.




பொருத்தப்பட்ட இரும்புக் கதவைப் பார்த்தவுடன் எனக்கு பிடிக்கவில்லை. குறிப்பிட்ட இரும்புக் கதவு பாதுகாப்பு அளிக்கும் வகையிலும் பொருத்தப் படவில்லை. அதோடு மேம்பாட்டாளர் எந்த ரக இரும்புக் கதவை பொருத்தப்போகிறார்கள் என்பதையும் எனக்கு அறிவிக்கவில்லை.

அதனால் நான் புதிய இரும்புக் கதவை பொருத்தினேன். புதிய இரும்புக் கதவைப் பொருத்திய பிறகு மேம்பாட்டாளரிடம் சென்று அவர் இரும்புக் கதவை பொருத்தியதற்காக நான் செலுத்திய மவெ. 500ஐ திரும்பக் கேட்டேன். அதற்கு அவர்கள் மேம்பாட்டாளரின் இரும்புக் கதவு தரத்தை நான் பின்பற்றாததால் என்னுடைய மவெ. 500ஐ அவர்கள் திருப்பிக்கொடுக்க முடியாது என அவர்கள் கூறினர். தனக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் வசிக்கு ஏற்ப ஒரு வீட்டு உரிமையாளர் வீட்டுக் கதவைப் பொருத்துவது குற்றமா. அப்படியானால் வீடு வைத்திருப்பவரின் உரிமைதான் என்ன?

**நடவடிக்கை :** இப்பிரச்னை தொடர்பாக பி.ப.சங்கம் பாரிசான்சாரி நிறுவனத்திற்கு கடந்த மே 1998ல் கடிதம் எழுதியது. பிரச்னையை எடுத்து விளக்கி புகார்தாரருக்கு மவெ. 500ஐ திருப்பிக்கொடுக்குமாறு கேட்டுக் கொண்டது. ஆனால் அவர்களிடமிருந்து எந்த வித பதிலும் வரவில்லை.

இதற்கு பிறகு, பி.ப.சங்கம் பாரிசான் சாரி நிறுவனத்திற்கு இரு நினைவுக் கடிதங்களை அனுப்பியது. இறுதியில் கடந்த செப்டம்பர் 1999ல் மேம்பாட்டாளர் பணத்தைத் திருப்பிக்கொடுக்க சம்மதித்தார். இந்தப் பணத்தைத் திரும்பப் பெறுவதற்காக புகார்தாரர் 17 மாதங்கள் காத்திருக்க வேண்டி இருந்தது.

## கெட்டுப்போன விசிடி பிளேயரை மாற்றிக்கொடுத்தனர்

**இங் செங் ஹூவாட்**
**ஆயர் ஈத்தாம், பினாங்கு**

**புகார் :** கடந்த அக்டோபர் 1998ல் நான் பினாங்கு, 1-ஸ்டோப் மின்லண்ட் பார்க்கில் உள்ள ஐயோவா மின்பொருள் நிறுவனத்திடமிருந்து வி.சிடி. சாதனம் ஒன்றை வாங்கினேன். சம்பந்தப்பட்ட சாதனத்தை நான் ஜனவரி 1999ல்தான் உபயோகிக்க ஆரம்பித்தேன்.

இச்சாதனத்தில் என்னுடைய சிடி போட்டால் அது இயங்கவில்லை. அதே சிடியை வேறு பிளேயரில் போட்டு பார்த்தபொழுது அது பாடியது. அதனால் என்னுடைய சிடியில் கோளாறு இல்லை. கோளாறு நான் வாங்கிய விசிடி சாதனத்தில்தான்.

இதனால் நான் ஐயோவா மின்பொருள் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டேன். மூன்று நாட்களுக்குப் பிறகு என்னுடைய வீட்டுக்கு வந்து விசிடி சாதனத்தை பழுது பார்ப்பதற்காக கொண்டு சென்றனர். இரண்டு வாரங்களுக்குப் பிறகு கடையின் தொழிலாளி சாதனத்தைத் திரும்பக் கொண்டு வந்தார். தொழிலாளி தான் கொண்டு வந்த சாதனம் புதியது என்றும் அது சரியாக வேலை செய்கிறது என்றும் குறிப்பிட்டார்.

இதற்கு முன்பு உள்ள விசிடி சாதனத்தில் உள்ள பிரச்னையே மறுபடியும் வர ஆரம்பித்ததால் அவர்கள் புதிய சாதனத்தைக் கொடுக்கவில்லை என்பதனைக் கண்டுபிடித்தேன்.

அதனால் மறுபடியும் சம்பந்தப்பட்ட கடைக்குத் தொலைபேசி அழைப்பு செய்தேன். இரு தொழிலாளிகள் என்னுடைய வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் மறுபடியும் விசிடி சாதனத்தை சோதனை செய்வதற்காக என்னுடைய இரு சிடிக்களையும் கொண்டு சென்றனர்.

என்னுடைய சிடிக்களையும் விசிடி சாதனத்தையும் கொண்டு செல்வதற்கு முன், சாதனம் மற்றும் இன்னும் 3 புதிய சிடிக்களோடு சீனப் பெருநாளுக்கு முன்பதாக கொடுப்பதாக வாக்களித்ததால் மட்டுமே நான் அவர்களைக் கொண்டு போக அனுமதித்தேன்.

இப்பொழுது மார்ச் மாதம் ஆகிவிட்டது. இன்னும் என்னுடைய விசிடிக்காக காத்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு நான் வாங்கிய விசிடிக்கான முழுத்தொகையையும் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

**நடவடிக்கை : இப்பிரச்னை தொடர்பாக பினாங்கு பயனீட்டாளர் சங்கம் ஐயோவா மின்பொருள் நிறுவனத்திற்குக் கடிதம் எழுதியது. ஐயோவாவின் மோசமான சேவையில் புகார்தாரர் மிகுந்த எரிச்சலுக்கு உள்ளாகியுள்ளார் என்பதை அவர்களுக்கு எடுத்துவிளக்கி, புகார்தாரர் வாங்கிய விசிடிக்கான முழுத்தொகையைத் திரும்பக் கேட்கிறார் என்பதையும் எடுத்து விளக்கினோம்.**




**ஏப்ரல் 1999ல் எங்களுக்கு அழைப்பு செய்த ஐயோவா நிறுவனம் புகார்தாரருக்குப் புதிய விசிடி கொடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.**

படிப்பகம்

www.padippakam.com



## பினாங்கு மேம்பாட்டு வாரியத்தின் தவற்றினால்

# என் பணம் பறிபோவதா?

பினாங்கு, சுங்கை நிபோங்கில் உள்ள அடுக்கு மாடி வீடு ஒன்றை வாங்குவதற்காக, லாவ் தாக் துன், 54 பினாங்கு மேம்பாட்டு வாரியத்தில் பதிவு செய்திருந்தார். வாக்கெடுப்புக்கு வரச்சொல்லி பினாங்கு மேம்பாட்டு வாரியம் திருமாதி லாவுக்கு 26.7.1999 தேதியிட்ட கடிதத்தை அனுப்பியிருந்தது.

6.8.1999ல் வீட்டைத் தேர்வு செய்வதற்கான குலுக்கல் நடைபெறும் என்று அக்கடிதத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த குலுக்கலுக்கு அவர் நிச்சயமாக வர வேண்டும். அப்படி வராவிட்டால் குலுக்கல் வாய்ப்பை இழந்துவிடுவார் என்றும் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது.

குலுக்கலில் திருமதி லாவுக்கு வீடு கிடைக்குமானால், அதே நாளில் திருமதி லாவ் விற்பனை மற்றும் வாங்குதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். குலுக்கல் விதிமுறைகளின்படி திருமதி லாவ் வீட்டு விலையில் 10% தொகையான மவெ. 40,250க்கான குரோஸ் செய்யப்பட்ட பேங் டிராப்ட் மற்றும் பட்டுவாடாத் தொகையாக மவெ. 50ஐ கொண்டு வர வேண்டும்.

எஞ்சியுள்ள 90 விழுக்காட்டுத் வீட்டுத் தொகையை விற்பனை மற்றும் வாங்குதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 6 மாதங்களுக்குள் செலுத்தியாக வேண்டும் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கடந்த 6.8.2000 அன்று நடந்த குலுக்கலில் திருமதி லாவுக்கு 1203/SH-131 எண் கொண்ட மவெ.402,500 வீடு கிடைத்தது. 23.8.2000 அன்று திருமதி லாவுக்கு விபரங்கள் அடங்கிய விலைப்பட்டியல் அனுப்பப்பட்டது. அதில் மீதத் தொகை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 6 மாதங்களில் அவர் கொடுத்தாக வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்து. பணத்தை தாமதமாகக் கொடுத்தால் வருடத்திற்கு 10% வட்டி செலுத்த நேரிடும்.

வீட்டுக்கான குடியிருப்புச் சான்றிதழ் கிடைக்கப்பெற்றவுடன், பினாங்கு மேம்பாட்டு வாரியம் 24.12.99 தேதியிட்ட கடிதத்தைத் திருமதி லாவுக்கு அனுப்பி வைத்தது. வீட்டை 18.1.200 அன்று வழங்கவிருப்பதாக அக்கடிதத்தில் அறிவித்திருந்தனர்.

ஆனால் வீட்டுக்கான சாவியைக் கொடுப்பதற்கு முன்பதாக குறிப்பிட்ட வீட்டை வாங்குபவர்கள் சில விதிமுறைகளுக்கு இணங்க வேண்டும் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட வீட்டை வாங்குவதற்கு வங்கிக் கடன் பெற்றவர்களும் அல்லது வீட்டின் முழுத் தொகையைச்

***வட்டி விதிக்கப்படாத கால கட்டம் முடிவுறுவதற்கு முன்பதாகவே திருமதி லாவுக்கு பினாங்கு மேம்பாட்டு வாரியம் தன்னுடைய தவற்றை அறிவித்திருக்க வேண்டும். அப்படியும் செய்யாமல் தவற்றை அவர்கள் பக்கம் வைத்துக்கொண்டு பயனீட்டாளரின் பணத்தைப் பறிப்பது முறையல்ல.***

செலுத்த நினைப்பவர்களும் வட்டியோடு சேர்ந்து வீட்டுக்கான தொகையை முழுமையாக செலுத்திவிட வேண்டும். அதோடு வீடு வாங்குனர்களுக்கு, அவர்கள் விற்பனை மற்றும் வாங்குதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 9 மாதங்களுக்கு வட்டி விதிக்கப்படமாட்டாது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த முழுத் தொகையையும் ஒருவர் செலுத்திவிட்டால்தான் குறிப்பிட்ட 9 மாதங்கள் முடிந்த பிறகு அடுத்து வரும் 12 மாதங்களுக்கு அதாவது 6.5.2000லிருந்து வீட்டின் குறைபாடுகளைக் கண்டுபிடிக்கும் காலகட்டம் தொடங்கும்.

அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டிருக்கும்பொழுது எவருமே இந்த 9 மாத கால கட்டத்தை வட்டி விதிக்கப்படாத ஒரு கால கட்டமாகத்தான் எடுத்துக்கொள்வார்கள்.

### தாமதம் ஏன்?

அதன் பிறகுதான் வந்தது திடீர் அதிர்ச்சி. கடந்த 23.3.2000ல் பினாங்கு மேம்பாட்டு வாரியம் திருமதி லாவுக்குக் கடிதம் எழுதியிருந்தது. அதில் திருமதி லாவ் அவர்களுக்கு மவெ. 2,282.68ம் இதனோடு சேர்த்து மவெ. 362, 250ம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. இதற்கு அவர் 29.2.2000 அன்று மீதத் தொகையைச் செலுத்தாததே காரணமாகும் என்றும் இந்தக் கடிதம் கிடைத்த இரு வாரங்களுக்குள் அவர் பணத்தைச் செலுத்தியாக வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது.

27.3.2000ல் திருமதி லாவுக்கு இன்னொரு நினைவுக் கடிதம் வந்தது. அதில் மிகவும் அறிவாளித்தனமாக அவர்களுடைய தவற்றைத் திருத்தி இருந்தனர். வட்டி கொடுக்கப்படாத கால கட்டம் 9 மாதங்களுக்குப் பதிலாக 6 மாதம்தான் என்று குறிப்பிட்டிருந்தனர். ஆகையால் 29.2.2000 வட்டி இல்லாமல் பணம் செலுத்து கால கட்டம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. அதோடு வீட்டில் உள்ள குறைபாடுகளைக் கண்டுபிடிக்கும் கால கட்டம் 6.2.2001 முடிவுக்கு வரும்.

24.12.99 தேதியிட்ட அவர்களுடைய கடிதத்தில் வட்டி விதிக்கப்படாத கால கட்டம் 9 மாதங்கள் என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் இதற்கு இரு முறை அனுப்பிய நோட்டீஸில் இந்தத் தவற்றை அறிவித்துவிட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

ஆகையால் பினாங்கு மேம்பாட்டு வாரியத்தின் தவற்றுக்கு திருமதி லாவ் பணம் செலுத்தியாக வேண்டும்.

### எங்களுடைய தவறுதான், ஆனால்...

திருமதி லாவ் இது அவருடைய அல்ல என்று அடித்துக் கூறினார். சென்ற வருடம் டிசம்பர் மாத இறுதியில் பினாங்கு மேம்பாட்டு வாரியத்திற்குத் தொலைபேசி அழைப்பு செய்து இந்த வட்டி இல்லாத கால கட்டம் 9 மாதங்கள்தான் என்பதனை உறுதி செய்துகொண்டார். மார்ச் மாதத்தில் புதிய வட்டி நோட்டீஸ் அனுப்பப்பட்டபொழுது, பினாங்கு மேம்பாட்டு வாரியம் வட்டி இல்லாத கால கட்டம் 9 மாதங்கள் என்று குறிப்பிட்டது அவர்களுடைய தவறுதான் என்று தொலைபேசி மூலம் ஒப்புக்கொண்டுள்ளனர்.




இது தொடர்பாக திருமதி லாவ் பினாங்கு மேம்பாட்டு வாரியத்திற்கு மனு செய்து கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் வட்டி இல்லாத கால கட்டம் முடிவுறும் சமயத்திலாவது பினாங்கு மேம்பாட்டு வாரியம் வட்டி இல்லாத கால கட்டம் 9 மாதங்கள் இல்லையென்றும் 6 மாதங்கள்தான் என்று அறிவித்திருக்க வேண்டும். அப்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்தாலாவது வட்டி முடிவுறும் கால கட்டத்திற்கு முன்பதாகவே வீட்டுத் தொகையைச் செலுத்த ஆயுத்தமாகியிருப்பார்.

ஏப்ரல் 2000ல் பினாங்கு மேம்பாட்டு வாரியம் அவருக்கு பதில் கடிதத்தை எழுதியிருந்தது. திருமதி லாவ் வட்டியோடு தொகையைச் செலுத்தியே ஆக வேண்டும் என்று அதில் குறிப்பிட்டிருந்தனர்.

வேறு வழி தெரியாமல் அதே மாதத்தில் திருமதி லாவ் பி.ப.சங்கத்தில் புகார் செய்தார்.

நாங்கள் இந்தப் பிரச்னையை ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களில் முதலமைச்சரின் பார்வைக்குக் கொண்டு சென்றோம். பினாங்கு மேம்பாட்டு வாரியம் இழைத்த தவற்றிற்கு திருமதி லாவ் பணம் செலுத்துவது ஏற்க முடியாத ஒன்று என்ற விபரத்தைப் பி.ப.சங்கம் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

இறுதியில் ஜூலை மாதத்தில் திருமதி லாவுக்கு விதிக்கப்பட்ட வட்டியை மீட்டுக்கொள்வதாக பினாங்கு மேம்பாட்டு வாரியம் அறிவித்திருந்தது. அதே மாதத்தில் திருமதி லாவின் வீட்டுக்கான சாவி அவருக்குக் கொடுக்கப்பட்டது.

பினாங்கு மேம்பாட்டு வாரியத்தின் தவற்றுக்காக பயனீட்டாளர் பணம் செலுத்துவது எந்த விதத்தில் நியாயம்? வட்டி இல்லாத கால கட்டம் முடிவுறுவதற்கு முன்பதாகவே அவர்கள் திருமதி லாவுக்கு அவர்களுடைய தவற்றை அறிவித்திருக்க வேண்டும். அப்படியும் செய்யாமல் தவற்றை அவர்கள் பக்கம் வைத்துக்கொண்டு பயனீட்டாளரின் பணத்தைப் பறிப்பது முறையல்ல.

## எயிட்ஸ் நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 190 லட்சம்

இதுவரைக்கும் சுமார் 19 மில்லியன் பேர் எயிட்ஸ் நோயினால் மரணமடைந்துள்ளனர். இன்னும் 34 மில்லியன் பேர் எச்.ஐ.வி. என்ற எயிட்ஸ் வைரஸ் கிருமியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நோய் ஆப்பிரிக்க நாடுகளில் சமுதாய மற்றும் பொருளாதாரப் பிரச்னைகளை ஏற்படுத்தியுள்ளது.

உகான்டா, பிரேசில், இந்தியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் எயிட்ஸைக் கட்டுப்படுத்துவற்கான வழிகள் இருந்தாலும் அதற்கென செலவழிக்கப்படும் தொகை மிகவும் பெரிது என்று எயிட்ஸ் தொடர்பான ஐக்கிய நாட்டு அறிக்கை ஒன்று கூறுகிறது.

பதினாறுக்கும் மேற்பட்ட நாடுகளில், அந்நாட்டு மக்கள் தொகையில் 15லிருந்து 49 வயதுக்கு உட்பட்ட பத்தில் ஒரு பகுதியினர் எயிட்ஸ் கிருமியை உடலில் கொண்டுள்ளனர்.

தென் ஆப்பிரிக்காவில் இருபத்து நான்கு வயதுக்குக் கீழ்ப்பட்ட 10 பெண்களில் அறுவரின் உடலில் இந்தக் கிருமி இருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன.

எயிட்ஸ் எல்லா விதத்திலும் மனித இனத்துக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக இருந்து வருகிறது.

*- இன்டர்நேஷனல் ஹெரால்ட் திரிபியூன், 28.6.200*

படிப்பகம்

www.padippakam.com



படித்துப் பயன்பெற வேண்டிய
பினாங்கு பயனீட்டாளர் சங்கத்தின்

# புதிய தமிழ் வழிகாட்டிகள்

வழிகாட்டி 1

## சீனி




விலை
மவெ. 3.00

- மலேசியாவில் நாம் மாவைவிட சீனியைத்தான் அதிகம் உட்கொள்கின்றோம்.
- மலேசியாவில் நீரிழிவு நோயால் 1.7 மில்லியன் பேர் அவதிப்படுகின்றனர்.
- நீரிழிவு நோயால் இந்தியர்கள் 13%, மலாய்க்காரர்கள் 10%, சீனர்கள் 8% அவதிப்பட்டு வருகின்றனர்.

**இத்தனை தகவல்கள் அடங்கிய ஒரே புத்தகத்தை நீங்கள் கண்டிப்பாகப் படிக்க வேண்டும். இன்றே வாங்கி என்றும் நலமுடன் வாழுங்கள்.**

**இப்புத்தகம் பி.ப.சங்கத்தின் பணிமனையில் மட்டும்தான் கிடைக்கும்.**

என்னுடைய முகவரிக்கு கீழ்கண்ட புத்தகங்களை அனுப்பி வைக்கவும்

| புத்தகம் | எண்ணிக்கை | மவெ |
|---|---|---|
| சீனி | ______ | ______ |
| புற்றுநோய் | ______ | ______ |
| மொத்தம் | ______ | ______ |

என் பெயர் : ____________________
(ஆங்கிலம்)
என் முகவரி : ____________________

இத்துடன் மவெ. __________ க்கான காசோலை/போஸ்டல் ஆர்டர் இணைத்திருக்கின்றேன்.

*உங்கள் பணத்தை அனுப்ப வேண்டியமுகவரி:*
PERSATUAN PENGGUNA PULAU PINANG,
228, JALAN MACALISTER, 10400 PULAU PINANG.

வழிகாட்டி 2

## புற்றுநோய்




விலை
மவெ. 2.00

- 1996ல் புற்றுநோய் காரணமாக 11,655 பேர் அரசாங்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். இதில் 1,335 பேர் அகால மரணமுற்றனர்.
- ஆண்டுதோறும் 30,000 புதிய புற்று நோயாளிகள் உருவாகின்றனர்.
- புகைப்பதால் 85% ஆண்களுக்கும் 46% பெண்களுக்கும் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுகிறது.

**இவற்றோடு புற்றுநோயைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளையும் தாங்கி வந்துள்ளது இந்த வழிகாட்டி நூல்.**

**ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய ஆரோக்கிய வழிகாட்டி நூல். வாங்குங்கள் - ஆரோக்கியமாக வாழுங்கள்.**

# நாங்கள் போராடுவோம்! உங்கள் உரிமைக்காக!

# பயனீட்டாளர் குரல்

பினாங்கு பயனீட்டாளர் சங்கத்தின் மாத இதழ்




**எங்களின் போராட்டம்**

- அபாயகரமான மற்றும் சுகாதாரமற்ற பொருட்கள்
- வர்த்தக மோசடி
- நிதி மோசடி
- மோசமான சேவைகள்
- சுற்றுப்புற பிரச்னைகள்
- நில மோசடி
- அடுக்கடை சுரண்டல்

**எங்களின் ஆலோசனை**

- பாட்டி வைத்தியம்
- ஆரோக்கியமான உணவுகள்
- மாணவர் குரல்
- பணத்தைச் சேமிப்பது எப்படி?
- சீரான வாழ்வுக்கு வழி என்ன?
- மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி?
- எதிர்ப்புக் குரல் கொடுக்க முறையான வழி

தமிழில்; தமிழ் படிக்கத் தெரிந்த பயனீட்டாளர்களுக்காக குரல் எழுப்புகின்ற ஒரே குரல்! பயனீட்டாளர் குரல்!

**தனி இதழ் மவெ. 1 மட்டும்**

சந்தா விபரம்: ☐ 1 ஆண்டு $14.50 ☐ 2 ஆண்டு $26.00 ☐ 3 ஆண்டு $36.00

எதிர்வரும் __________ 2000-லிருந்து என் முகவரிக்கு பயனீட்டாளர் குரல் இதழை அனுப்பி வைக்கவும். இத்துடன் ம.வெ. __________ அனுப்பியுள்ளேன்.

என் பெயர் : ____________________
(ஆங்கிலம்)

முகவரி: ____________________

முகவரி: PERSATUAN PENGGUNA PULAU PINANG, 228 JALAN MACALISTER, 10400 PULAU PINANG

பயனீட்டாளர் குரல்
**பயனீட்டாளர்களின் பாதுகாவலன்**

www.padippakam.com



# அலைபாயுதே மனமே! அடக்கிட சுபதினமே!



கவிச்சூரியன்
எஸ்.எஸ். மணிமாறன்

ஒரு வழிப்பாதையில் செல்லாமல் - மனம்
இருவழிப் பாதையில் செல்கின்றது
இருவிழிப் பார்த்தும் தடுமாறும் - மனம்
இருண்ட தேசத்தில் நடக்கின்றது

தெருவழி நடந்து செல்கையில் - மனம்
திசை மாறி எங்கோ அலைகின்றது
பெருவழி திட்டத்தில் நுழையாமல் - மனம்
பாதை மாறி பயணம் தொடர்கின்றது

புதுவழி நலமாய் தெரிந்தும் - மனம்
புரியாமல் அலைமோதி தவிக்கின்றது
பொதுவழி நலமாய் போட்டும் - மனம்
புகலிடம் தேடி விழிக்கின்றது

வரும் வழி ஆயிரமிருந்தும் - மனம்
வந்த வழி மறந்து புலம்புகின்றது
தரும் வழி நன்மையே தெரிந்தும் - மனம்
தள்ளாடி தவித்து விம்முகின்றது

நல்லவழி நடந்துபோகாது - மனம்
நலிந்து விரக்தியால் வாடுகின்றது
பொல்லா வழி நடந்து நாளும் - மனம்
போகும் வழியை விரைந்து தேடுகின்றது

வரும் வலியை தாங்க முடியாது - மனம்
வருந்தி யழுது துடிக்கின்றது
ஒருவழி அதுவே நேர்வழி - மனம்
நல்வழி நாடுதல் நலமன்றோ

# இருட்டைச் சபிக்காதே

**இருட்டைச் சபிப்பதில் எந்த பலனும் இல்லை. மாறாக இருட்டை அகற்ற விளக்கு ஏற்றினால் இருட்டு அகன்று வெளிச்சம் பரவும். வழி தெரியும். வாழ்வு பிறக்கும். சமுதாயப் பிரச்னைகளும் அதுபோல்தான். அவற்றைப் பேசிக்கொண்டே இருப்பதில் பிரச்னை தீரப்போவதில்லை. மாறாக தீர்க்கமான நடவடிக்கைகளில் இறங்குவோமானால் நல்ல பலனைக் காணலாம்.**

# மாணவரே.....!



ம.அ.சந்திரன்
தாசெக் குளுகோர்

கணக்குப் பாடம் போதித்து - நல்ல
கவிதை, கதைகள் போதித்து
மணக்கும் பள்ளிக் கூடத்தை - சாதி
வளர்க்கும் வீடாய் ஆக்காதீர்!
மனத்தில் புகுந்த அறியாமை - என்னும்
மருளை விரட்டிப் பகுத்தறிவு
கனவைப் பாய்ச்சும் பள்ளியினை - சண்டை
காணுங் களமாய் ஆக்காதீர்....!

கள்ளங் கபடம் இல்லாமல் - ஒழுக்கக்
கல்விக் கொடுத்து உலகத்தை
மெல்லத் திருத்தும் பள்ளியினை - பகட்டை
விளம்பும் இடமாய் ஆக்காதீர்!
உள்ளந் தெளிந்து சமூகத்தை - நீ
உயர்த்த உலகச் சரித்திரத்தைச்
சொல்லிக்கொடுக்கும் பள்ளியினை - மடமை
சுற்றும் மடமாய் ஆக்காதீர்...!

தன்னம் பிக்கை உனக்களித்து - பட்ட
தாரியாய் உன்னை மாற்றுதற்குத்
தொண்டு செய்யும் பள்ளியினை - ஒரு
சுடுகாட் டைப்போல் ஆக்காதீர்!
அன்பும் பண்பும் ஒற்றுமையும் - உனக்கு
அருளி நெஞ்சில் நம்பிக்கை
எண்ணம் வார்க்கும் பள்ளியினை - காதல்
எய்தும் புதராய் ஆக்காதீர்....!

அறிவியல் கற்றுத் தருகின்ற - உன்னை
அறிஞ னாக்கிப் பாராட்டும்
அரிய பள்ளிக்கூடத்தை - சினிமா
அரங்கமாக்கி ஆடாதீர்!
பொறியியல் கல்விக் கற்பித்து - உனக்குள்
புதிய புதிய சிந்தனைகள்
பிறக்க உதவும் பள்ளியினை - போற்றிப்
பிழைகள் தவிர்ப்பீர் மாணவரே....!

# இன்றைய இளைஞர்கள் வுணர

பி.இராமசாமி
தாமான் சந்திராவாசி
நிபோங் திபால்

கடிகாரம் ஓடுவதைக் கொஞ்சம் கவனியுங்கள்
கடினமாய் வுழைத்துமே இனி முன்னேறுங்கள்
கல்வியிலே முழுமையான கவனத்தைச் செலவிடுங்கள்
காலத்தின் அருமையை நன்றாக உணருங்கள்

பெரியோர்களுக்கென்றுமே மரியாதை கொடுத்திடுங்கள்
பொறுப்புள்ள மனிதனென்பதை எடுத்துக்காட்டுங்கள்
பிழைத்திடும் வழி வகைகளை நன்கறிந்திடுங்கள்
போக்கிரிக் கும்பல்களை நாட்டை விட்டு விரட்டி அடியுங்கள்



நாட்டுக்கே விசுவாசமுள்ள குடிமகனாக இருந்திடுங்கள்
நன்றியையும் நல்ல திறமைகளையும் யெடுத்தியம்புங்கள்
நாள்தோறும் தவறாமல் நாளிதழ் படித்திட யெண்ணுங்கள்
நாகரீகமுள்ள "நல்லிதயங்களாக" வாழ்ந்துமே காட்டுங்கள்

பெற்றோர்களைப் பேணியுமே காத்திடுங்கள்
பொறுப்புடையவர்களாக உடல் நலம் பேணிடுங்கள்
பொறுமையில் சிறந்தென்றுமே விளங்கிடுங்கள்
பொல்லாதவன் போக்கிரியிவன் என்றே வாழ்ந்திடாதீர்கள்

கெட்டவர்களின் சகவாசத்தை என்றும் விரட்டிடுங்கள்
கேள்விகள் கேட்டென்றுமே யெதிர்வாதம் பண்ணிடுங்கள்
கேட்பாரற் றோர்களுக்கும் தர்மம் செய்து விடுங்கள்
கேடு கெட்டவள் "தமிழனென்று" மட்டும் வாழாதீர்கள்



பாட்டி ஔவையின் நீதிமொழி கேட்டுயர்ந்திடுங்கள்
பயனுள்ள நூல்கள் பலவாயிரமுண்டு பயின்றுணர்ந்திடுங்கள்
பாதகம் செய்பவருக்கும் மனம் வந்துமேச் செய்யாதீர்கள்
பகவான் ஒருவனிருப்பதை மனதிலெண்ணியே வாழ்ந்திடுங்கள்

சோம்பேறிகளாய் யென்றும் ஊர் சுற்றித் திரியாதீர்கள்
சோறு கண்டவிடம் சொர்க்க மென்றெண்ணி வாழாதீர்கள்
சுதந்திரம் பெற்ற நாடிது உரிமையைக் கேட்டு வாழ்ந்திடுங்கள்
சுக நலம் தேடி வுடல் பேணி யென்றுமே சிறந்திடுங்கள்.

படிப்பகம்

# கனடாவின் எச்சரிக்கைகளும்

மலேசியாவின் எச்சரிக்கையும்







## கனடாவில்


கீழ்கண்ட சுகாதார எச்சரிக்கைகள் சிகரெட் பாக்கெட்டின் 50% இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

* அனைத்து சிகரெட் லேபல்களும் அதன் உண்மையான அளவைக் காட்டுகின்றன.































மலேசியாவில் சிகரெட் பாக்கெட்டுக்களில் மிகவும் பலவீனமான, பொதுவான, மிகவும் சிறிய எழுத்துக்களில் இந்த அபாய அறிவிப்பு உள்ளது.

AMARAN OLEH KERAJAAN MALAYSIA : MEROKOK MEMBAHAYAKAN KESIHATAN

Published by Consumers' Association of Penang, 228 Jalan Macalister, 10400 Pulau Pinang (Tel: 04-2293511) Printed by Ultimate Print Sdn. Bhd. No. 12B, 1 st Floor, Jalan 213, Off Jalan Kilang, 46050 Petaling Jaya (Tel: 03-793

www.padippakam.com
படிப்பகம்